

# ஆண்டறிக்கை

# 2021

## கட்புல அரங்கக் கலைப் பல்கலைக்கழகம்

## தூர நோக்கு

“கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகளின் பல்வேறுபட்ட பாரம்பரியங்கள் மற்றும் வளர்ச்சிகளை அங்கீகரித்து கலாசாரம், அழகியல், ஆக்கப் படைப்பு மற்றும் பொழுதுபோக்கு போன்ற துறைகளில் மானிட அனுபவங்களின் அறிவை மேம்படுத்தும் மற்றும் சுத்திகரிக்கும் இலங்கையின் முன்னணிப் பல்கலைக்கழகமாகப் பரிணமித்தல்.”

## செயற் பணி

“கட்புல மற்றும் அரங்கேற்றக் கலை ஆகிய துறைகளில் மற்றும் கட்புலக் கலை ஆராய்ச்சியில் அறிவு மற்றும் கல்வியைப் பெற்ற புத்திசாதுரியம்மிக்க மற்றும் ஆக்கத்திறனைக்கொண்ட பிரஜைகளை உருவாக்குதல்.”

இலங்கை மற்றும் உலகளாவிய பிரஜைகளின் சமூக மற்றும் கலாசாரத் தேவைகளுக்கு பங்களிப்பை வழங்கியவாறு மானிட நேயக் கல்வியறிவை விரிவுபடுத்துவதன் ஊடாக அழகியல் கல்வி, கலாசாரம் மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்படல்.

**கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**
**இலங்கை.**

## துணைவேந்தரின் ஆசிச் செய்தி



கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக 2020 ஒக்தோபர் 13 ஆம் திகதி கடமைகளை ஆரம்பித்த எனது இலக்கு என்னவெனில் நவீன கற்றல் மற்றும் கற்பித்தல் சூழலை ஏற்படுத்துவதனூடாக பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தை சர்வதேசம் வரை மேம்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதாகும்.

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக மட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட போதிலும் எனது நோக்கிற்கமைய 2021 ஆம் ஆண்டின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

### 2021 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்பட்ட சிறப்பான வெற்றிகள்

- பழைய உணவகத்திற்குப் பதிலாக நவீன வசதிகள் மற்றும் உயர் தரத்திலான உணவக சேவையைக் கொண்ட உணவகமொன்றை அமைத்து மாணவர்கள் மற்றும் பணியாட்குழுவின் நலனோம்புகை வசதிகளை மேம்படுத்தல்.
- உலகளாவிய தொற்று நோய் நிலவினாலும் மாணவர்களுக்கான விரிவுரைகளை இணையவழி ஊடாக தொடர்ந்து நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- 2021 ஆம் ஆண்டாகும்போது கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை அநேகமாக நிறைவு செய்தல்.
- பல்கலைக்கழகத்தினால் பரீட்சைகள் பிரிவுக்கு வரையறைகள் விதிக்கப்பட்டு பரீட்சை நடவடிக்கைகள் மறுசீரமைக்கப்பட்டன.
- கொவிட் 19 தொற்று நோய் நிலவிய காலப் பகுதியினுள் Zoom டெலி கருத்தரங்கு (Teleconferencing) மென்பொருள் மற்றும் கற்றல் முகாமைத்துவ முறையைப் பயன்படுத்தி 2018 / 2019 கல்வியாண்டு மற்றும் 2019 / 2020 கல்வியாண்டுக்காக சிறப்பான வகையில் விரிவுரைகளை நடாத்தி கல்விசார் ஆளணியின் அனைத்து அலுவலர்கள் மற்றும் மூன்று பீடங்களினதும் அனைத்து மாணவர்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதம் மற்றும் இணையவழிக் கற்பித்தல் முறை என்பவற்றை பயன்மிக்க வகையில் பயன்படுத்தும் விதம் சம்பந்தமாக கல்விசார் ஆளணிக்கு பல பயிற்சிப் பட்டறைகளை பல்கலைக்கழகத்தினால் நடாத்தியமை.
- பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைப் பதிவு செய்தல், அனுமதித்தல், கொடுப்பனவு அலுவல்கள், சர்பார்ப்பு, மாணவர் முகாமைத்துவம், மனித வளங்கள் முகாமைத்துவம், நிதி, பொதுவான நிருவாக அலுவல்கள் மற்றும் பூர்வாங்க பரீட்சை நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைக்குப் பின்னரான நடவடிக்கைகள் உள்ளிட்ட செயற்பாடுகளை சிறப்பாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியுமான வகையில் ஒட்டுமொத்த பல்கலைக்கழக முகாமைத்துவத்திற்கும் இலத்திரனியல் முகாமைத்துவ முறைமையொன்றை (E Management system) நடைமுறைப்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே அழகியற்கலை துறை சம்பந்தமான அறிவை பரப்பும் நோக்கில் கட்புல ஆற்றுகைக் கலைகள் தொலைக்காட்சி எனும் பெயரில் தொலைக்காட்சி நேரலையொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.இந்த நடவடிக்கையின் மேலதிக நோக்கம் என்னவெனில், பொழுதுபோக்கை இலக்காகக்கொண்டு பொது மக்களின் உயர் அழகியற்கலை இரசனையை மேம்படுத்துவதாகும். மாணவர்களுக்கு தமக்குரிய கற்கைத் துறையில் தொழில்சார் நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தப் பயிற்சிப் பிரிவை தாபித்தல்.
- கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழகத்தினுள் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் எனும் பெயரில் பிரிவொன்றை தாபித்தல்.

- மீளாய்வாண்டில் கட்டிடங்கள் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம் | மொத்தச் செலவின மதிப்பீடு (ரூ. மில்.) | 2021 ஆம் ஆண்டிற்கான செலவு (ரூ. மில்.) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|
| இசை பீடம் மற்றும் பொது வசதிகள் கட்டிடத் தொகுதி | 775 | 143.97 | நிர்மாணப் பணிகள் குறிப்பிடத்தக்களவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 99% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. |
| கட்புலக் கலைப் பீடத்திற்கான கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 492 | 51.03 | நிர்மாணப் பணிகள் குறிப்பிடத்தக்களவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 99% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. |

பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவின் அலுவல்கள் University Business Linkage (UBL) Cell

- Accelerating Higher Education Expansion and Development (AHEAD) Evaluation திட்டத்தின் மதிப்பீட்டு மீளாய்வு 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்டதுடன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் வணிக இணைப்புப் பிரிவுக்கு 04 ஆவது கட்டத்திற்கு (இறுதிக் கட்டம்) செல்வதற்கு சபையின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதுடன் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 13 மில்லியன் ரூபா தொகை வழங்கப்பட்டது.

- கைச்சாத்திடப்பட்ட புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்கள்

| | முனைப்பான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் பற்றிய விபரம் | கைச்சாத்திடப்பட்ட திகதி | கைச்சாத்திட்டுள்ள அடுத்த தரப்பு |
|---|---|---|---|
| 01 | இலங்கை வர்த்தக சபை, MBSL காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை | 2021-01-13 | இலங்கை வர்த்தக சபை, MBSL காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| 02 | தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க உதவி மையத்திற்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை (நிருவாக சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.) | 2021-03-17 | தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் |

சிரேஷ்ட பேராசிரியர் (கலாநிதி) ரோஹண மஹலியனாரச்சி
துணைவேந்தர்
கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்.

# பொருளடக்கம்


01. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் தகவல்கள் சுருக்கமாக.. 64

01.01 நிறுவனக் கட்டமைப்பு 64

01.02 பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் தகவல்கள் சுருக்கமாக.. 65

02. நிர்வாக சபை 66

03. மூதவை (செனட்) 67

04. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரம் 67

04.01. 2021 ஆம் ஆண்டின் வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரம் 67-68

04.02. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான விபரம் 2019/2020 69

04.03. மாணவர்கள் பற்றிய விபரம் - இளமாணிப் பட்டம் 2021 69 - 70

04.04. 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் இளமாணிப் பட்டம் சம்பந்தமான ஒப்பீட்டு ரீதியிலான விபரம் 70

05. பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் 71

06. வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள் 71

07. மாணவர் உதவித் தொகை மற்றும் மாணவர்களுக்கான செலவு பற்றிய விபரம் 71

07.01. மஹபொல மற்றும் மாணவர் உதவு தொகையைப் பெறுவோர் பற்றிய விபரம் (2021) 71

07.02. மாணவர்களுக்கான செலவுகள் (2021) 72

08. விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள விதம் (2021) 72

09. ஆளணி பற்றிய தகவல்கள் 72

09.01. கல்விசார் ஆளணி / கல்விசார் உதவி மற்றும் நிர்வாக ஆளணி 72-73

09.02. நிர்வாக மற்றும் நிதிசார் அலுவலர்கள் 73

09.03 கல்விசார் ஆளணி 74

09.04. ஆராய்ச்சிக் கொடுப்பனவு பற்றிய விபரம் 74

09.05. கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணி இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள விதம் 75

09.06. நிர்வாக ஆளணி மற்றும் கல்விசாரா ஆளணி இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள விதம் 76

09.07. ஆளணியில் ஏற்பட்ட மாற்றங்கள் 77

10. ஆளணி மேம்பாடு 78

10.01. ஆளணி மேம்பாட்டு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் 78

10.01.01. கல்விசார் ஆளணிக்காக... 78


10.01.02. கல்விசாரா ஆளணிக்காக... 79

| | | |
|---|---|---|
| 10.02 | பல்கலைக்கழக ஆளணி அங்கத்தவர்கள் பங்குபற்றிய கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள். | 79 |
| 10.03 | பல்கலைக்கழக நூலக ஆளணி அங்கத்தவர்கள் பங்குபற்றிய கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள். | 80 |
| 11. | உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம் | 80 |
| 12. | நூலகத்தின் நூல்கள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான விபரம் 2020 / 2021 | 80 |
| 13. | மூலோபாயத் திட்டம் மற்றும் செயல் திட்டம் | 80 |
| 13.01. | மூலோபாயத் திட்டம் | 80 |
| 13.02. | செயல் திட்டம் | 81 |
| 14. | தொழில்சார் வழிகாட்டிப் பிரிவின் அலுவல்கள் | 81 |
| 15. | தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 81 |
| 16. | சீ. டி எஸ். குலதிலக்க காப்பகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவி அலுவல்கள் | 82 |
| 17. | தர உத்தரவாத மையம் | 82-83 |
| 18. | உடற் கல்விப் பிரிவின் அலுவல்கள் | 83 |
| 19. | தகவல் பிரிவு | 84 |
| 20. | கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக அச்சகம் | 84 |
| 21. | பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு (University Business Linkage Cell) | 85-87 |
| 22. | சர்வதேச உறவுகளுக்கான மையம் | 87-88 |
| 23. | ஆராய்ச்சிக் கட்டுரைகளை முன்னிலைப்படுத்தல் - 2021 | 88-91 |
| 24. | கணக்காய்வுக் குழு அறிக்கை - 2021 | 92 |
| 25. | பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால இலக்கு பற்றிய அறிக்கை | 93 |
| 26. | 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை அறிக்கை | 94-123 |
| 27. | **கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** | 124-129 |
| 28. | **கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – பதில்கள்** | 130-132 |

# 01. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பல்கலைக்கழகத்தின் வரலாறு பற்றிய தகவல்கள் பொழிப்பு

## 01.01 நிறுவனக் கட்டமைப்பு

Organizational Structure – University of the Visual and Performing Arts




LIST OF ACRONYMS

CODL - Center for Open and Distance Learning
SDC - Staff Development Center
CGU - Career Guidance Unit
CQA - Center for Quality Assurance
Phy. Ed. - Physical Education
ITC - Information Technology Center
IU - Information Unit
AVU - Audio Visual Unit
CIR - Center for International Relations

## 01.02 பல்கலைக்கழகத்தின் வரலாறு பற்றிய தகவல்கள் பொழிப்பு

1893 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் கற்பிக்கப்பட்ட பாடங்களிடையே சித்திரக் கலைக்கென கற்கைப் பிரிவொன்று காணப்பட்டது. 48 மாணவர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவகத்தில் 1902 ஆம் ஆண்டளவில் 200 மாணவர்கள் வரை அதிகரித்ததாக குறிப்புக்கள் காணப்படுகின்றன. 1933 ஆம் ஆண்டாகும்போது வரைதல், நிறந் தீட்டுதல் மற்றும் சிற்பக் கலை போன்ற கலைகள் வரை விருத்தியடைந்த இந்தக் கலைப் பாடம் 1942 ஆம் ஆண்டாகும்போது கலை மற்றும் கலை நுட்பங்கள் எனும் பெயரில் தனியான பிரிவொன்றாக விரிவடைந்து கைவினைக் கலை நுட்பம், புகைப்படக் கலை நுட்பம் போன்ற பாடங்கள் என விரிவடைந்தது.

தொழில்நுட்பக் கல்லூரி 1949 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் தனியான பிரிவொன்றாக நிறுவப்பட்டதன் பின்னர் கலை மற்றும் கலை நுட்பங்கள் பிரிவு ஹோர்ட்டன் பிளேஸில் அமைந்துள்ள ஹேவூட் மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், அதன் அதிபதியாக கலை ஆசான் திரு. ஜே.டீ.ஏ.பெரேரா அவர்கள் சேவையாற்றினார். 1952 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி முதல் இந்த நிறுவகத்திற்கு இசை மற்றும் நடனம் ஆகிய பிரிவுகளை இணைத்து அரசாங்கத்தின் நுண்கலை (கவின் கலை) நிறுவகம் (Government College of Fine Arts) ஆக நிறுவப்பட்டதுடன் 1953 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் சங்கீதம் மற்றும் நடனப் பிரிவுகள் அல்பிரட் கிரசன்ட் இற்கு கொண்டு வரப்பட்டது. 1956 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவகம் இலங்கை தேசிய கலை நிறுவகமாக பெயரிடப்பட்டு உள்ளூராட்சி மற்றும் கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1965 ஆம் ஆண்டாகும்போது மீண்டும் கல்வி அமைச்சின் கீழ் இந்த நிறுவகம் அமைக்கப்பட்டு அரசாங்க சித்திரக் கல்லூரி, அரசாங்க இசைக் கல்லூரி மற்றும் அரசாங்க நடனம் மற்றும் பாலே நடனக் கல்லூரி எனும் பெயரில் மூன்று கல்லூரிகள் அமைக்கப்பட்டு மூன்று அதிபர்களின் நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டது. சித்திரக் கல்லூரிக்கு கலாநிதி ஸ்டேன்லி அபேசிங்க, இசைக் கல்லூரிக்கு கலாநிதி லயனல் எதிரிசிங்க மற்றும் நடனக் கல்லூரிக்கு கலாநிதி எஸ்.பணீபாரதி ஆகிய துறை சார்ந்த தேர்ச்சி பெற்றவர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட்டனர்.

தொடர்ந்து எட்டு தசாப்தங்களுக்கு அதிக காலம் தேசிய கலாசாரம் மற்றும் கலைகளை பேணி வளர்த்து வந்த மற்றும் பல்வேறு மாற்றங்களைக் கொண்ட கட்டங்களைத் தாண்டி வந்த இந்த நிறுவகம் 1972 இன் 01 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 85 (4) ஆம் பிரிவின் கீழ் 1974 மே 01 ஆம் திகதி முதல் இலங்கை பல்கலைக்கழகத்தின் கட்புல ஆற்றுகைக் கலைகள் நிறுவகமாக நிறுவப்பட்டது.

1978 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவகத்தினால் நுண்கலைப் பட்டதாரிகள் உருவாக்கப்பட்டதுடன் முதலாவது பட்டதாரிகள் குழுவில் 63 மாணவ மாணவிகள் இருந்தனர்.

1978 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட புதிய 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் அமுல்படுத்தப்பட்டவுடன் அன்று நிலவிய பல்கலைக்கழக வளாகங்கள் தனியான பல்கலைக்கழகங்களாக அமைக்கப்பட்டமையும் 1979 இன் 10 ஆம் இலக்க ஒழுங்கு விதிகளுக்கமைய அழகியற் கலைகள் கற்கை நிறுவகம் 1980 முதல் களணிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவகமொன்றாக நிறுவப்பட்டது.

### பல்கலைக்கழகத்தை தாபித்தல்

களணிப் பல்கலைக்கழகத்தின் அழகியற் கலைகள் கற்கை நிறுவகம் 2005 யூலை 01 ஆம் திகதி முதல் அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆவது பந்தியுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆவது பிரிவிற்கமைய 1400/24 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக **கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்** தாபிக்கப்பட்டது.

### இதுவரை நியமிக்கப்பட்டுள்ள துணைவேந்தர்கள்

முதலாவது துணைவேந்தர் - கலாநிதி திரு.லெஸ்ட்டர் ஜேம்ஸ் பீரிஸ்

இரண்டாவது துணைவேந்தர் - கலாநிதி திரு.டப்ளியு.டீ.அமரதேவ

மூன்றாவது துணைவேந்தர் - பேராசிரியர் *சங்கீத் நிபுண்* திரு.சனத் நந்தசிரி

## 02 நிர்வாக சபை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 44 ஆவது பிரிவுக்கமைய மற்றும் 1985 இன் 07 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 24 ஆவது பிரிவுக்கமைய 2021 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக நிர்வாக சபை கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

| | |
|---|---|
| துணை வேந்தர் (தலைவர்) | சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி திரு.ரோஹன பீ மஹலியனஆரச்சி |
| **பீடாதிபதிகள்** | |
| பட்டப் படிப்பு பீடம் | பேராசிரியர் கோலித்த பானு திசாநாயக்க |
| கட்புல கலை பீடம் | சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ஜகத் ரவீந்திர |
| இசைக்கலை பீடம் | கலாநிதி பீ.கே.எஸ்.பீ.ரத்னகுமார |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | கலாநிதி திரு.இந்திக்க பெர்டினென்டு |
| **ஏனையவை** | |
| மூதவையின் பிரதிநிதிகள் | சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ஜே ஏ எஸ் பீ அரவிந்தன (2021.02.25 வரை) |
| | கலாநிதி வஜிர நலிந்த ஜயதிலக்க (17.07.2021 முதல்) |
| | கலாநிதி தரங்க தன்தெனிய (07.04.2021 முதல்) |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமனங்கள் | பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச |
| | பேராசிரியர் திருமதி குசுமா கருணாரத்ன |
| | பேராசிரியர் திரு. நிமல் கீர்த்தி தங்கல்ல |
| | திரு. குணசேன தேனபது |
| | திரு. லக்ஷ்மன் அபேசேக்கர |
| | திரு. ரஞ்சித் லியனகே |
| | திரு.ரீ.தர்மராஜா |
| | திரு. சீ. மாலியத்த |
| சபையின் முன்னாள் செயலாளர் | திரு. பி.எம்.தயாவங்ச - பதிவாளர் |
| மீளாய்வாண்டில் நடைபெற்ற கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை 10. | |

## 03 மூதவை

| | |
|---|---|
| துணைவேந்தர் (தலைவர்) | சிரேஷ்ட பேராசிரியர் (கலாநிதி) ரோஹண பீ.மஹலியனாரச்சி |
| **பீடாதிபதிகள்** | |
| பட்டப் படிப்பு கற்கை பீடம் | பேராசிரியர் கோலித்த பானு திசாநாயக்க |
| கட்புலக் கலை பீடம் | சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ஜகத் ரவீந்திர |
| இசைக் கலை பீடம் | கலாநிதி பீ.கே.எஸ்.பீ.ரத்னகுமார |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | கலாநிதி திரு.இந்திக்க பெர்டினென்டு |
| **பேராசிரியர்கள்** | |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | பேராசிரியர் கருணாரத்ன பண்டார |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | பேராசிரியர் எஸ்.பீ.டீ.லியனகே |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | பேராசிரியர் மங்கல சேனாநாயக்க |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | பேராசிரியர் (திருமதி) கே.டீ.எஸ்.ராஜபக்ஷ |
| கட்புலக் கலை பீடம் | பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர |
| மூதவையின் முன்னாள் செயலாளர் | திரு. பி.எம்.தயாவங்ச - பதிவாளர் |
| மீளாய்வாண்டில் நடைபெற்ற கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை 07. | |

மேற்குறிப்பிடப்பட்டோர் தவிர 1985 இன் 07 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 26(2) (i) பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அனைத்து கற்கைப் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் மூதவையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

## 04 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரம்

### 04.01 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரம் - 2021

| பீடம் | கற்கைப் பிரிவு | மொத்த மாணவர் எண்ணிக்கை | | | | மொத்த கற்கைப் பிரிவுகள் | மொத்த கல்விசார் துணை ஆளணி | மொத்த தற்காலிக விரிவுரையாளர் | மொத்த வருகைதரு விரிவுரையாளர் ஆளணி | மொத்த கல்விசாரா ஆளணி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 ஆம் வருடம் | 2 ஆம் வருடம் | 3 ஆம் வருடம் | 4 ஆம் வருடம் | | | | | |
| கட்புலக் கலைகள் | சித்திரக் கலை | 97* (2018/2019) 111 * (2019/2020) | 19 | 17 | 24 | 06 | - | 01 | 14 | 31 |
| | சிற்பக் கலை | | 08 | 11 | 07 | 05 | - | - | 07 | |
| | கட்புல தொடர்பாடல் ஆக்கக் கலை | | 11 | 10 | 11 | 05 | - | 01 | 23 | |
| | மட்பாண்டக் கலை | | 09 | 07 | 05 | 01 | 01 | 02 | 13 | |
| | பல்வித அறிவியல் ஆற்றல் கலை | | 10 | 11 | 09 | 04 | - | 03 | 09 | |
| | ஆடை மற்றும் அணிகலன் கலை | | 12 | 11 | 09 | 03 | - | 01 | 21 | |
| | வரலாறு மற்றும் கலைக் கோட்பாடுகள் | | 05 | 11 | 09 | 04 | - | 02 | 13 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பல்லூடகக் கலை | | 13 | 10 | 11 | 02 | - | 02 | 15 | |
| | அச்சிடல் கலை | | 08 | 08 | 08 | 04 | - | 01 | 11 | |
| **மொத்தம்** | | **208** | **95** | **96** | **93** | **34** | **01** | **13** | **126** | **31** |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | **கற்கைப் பிரிவு** | 1 ஆம் வருடம் | 2 ஆம் வருடம் | 3 ஆம் வருடம் | 4 ஆம் வருடம் | | | | | 23 |
| | மேல் நாட்டு நடனம் | 242* 2018/2019 289* 2019/2020 | 89 | 89 | 87 | 15 | 03 | - | - | |
| | கீழ் நாட்டு நடனம் | | 33 | 43 | 35 | 08 | 02 | - | - | |
| | சப்ரகமுவ நடனம் | | 15 | 23 | 18 | 06 | 01 | - | - | |
| | இன்னிசை (சிம்பொனி) | | 05 | 04 | 06 | 04 | - | - | - | |
| | இந்திய மற்றும் ஆசிய நடனம் | | 33 | 14 | 14 | 09 | 03 | - | 02 | |
| | நடன அரங்கேற்றக் கலை வரலாறு மற்றும் கோட்பாடுகள் | | 64 | 45 | 43 | 06 | - | - | 15 | |
| | நாட்டியக் கலை, பாலே நாட்டியம் மற்றும் நவீன நடனங்கள் | 49* (2018/2019) 71* (2019/2020 | 49 | 33 | 33 | 12 | 02 | - | 04 | |
| | ஆங்கில மொழி கற்பித்தல் | - | - | - | - | 02 | - | 05 | 09 | |
| **மொத்தம்** | | **651** | **288** | **251** | **236** | **62** | **11** | **05** | **30** | **23** |
| இசைப் பீடம் | **கற்கைப் பிரிவு** | 1 ஆம் வருடம் | 2 ஆம் வருடம் | 3 ஆம் வருடம் | 4 ஆம் வருடம் | | | | | 21 |
| | வட இந்திய இசை | 295* 2018/2019 241* 2019/2020 | 81 | 92 | 114 | 22 | 08 | - | 09 | |
| | தென்னிந்திய இசை | | 02 | 03 | 06 | 01 | 02 | - | 02 | |
| | மேலைத்தேய இசை | | 34 | 41 | 34 | 06 | - | - | 38 | |
| | மானிட பண்பாட்டியல் இசை | | 36 | 42 | 29 | 07 | 03 | - | 03 | |
| | பிரயோக இசை மற்றும் வெகுசன தொடர்பாடல் | | 47 | 14 | 11 | 04 | 01 | - | 24 | |
| | இசை அறிவியல் | | 40 | 19 | 27 | 04 | - | - | 08 | |
| | பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | - | - | - | - | - | 01 | - | - | |
| **மொத்தம்** | | **536** | **240** | **211** | **221** | **44** | **15** | **-** | **84** | **21** |

* தற்போது 2018/2019 கல்வியாண்டு மற்றும் 2019/2020 கல்வியாண்டு என முதலாம் ஆண்டில் இரண்டு தொகுதி மாணவர்கள் கற்கின்றனர்.

## 04.02 வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான விபரம் 2020/2021

| பீடம் | | மொத்த மாணவர் எண்ணிக்கை | | மொத்த கல்விசார் ஆளணி | | மொத்த கல்விசார் துணை ஆளணி | | மொத்த தற்காலிக விரிவுரையாளர் ஆளணி | | மொத்த வருகைதரு விரிவுரையாளர் ஆளணி | | மொத்த கல்விசாரா ஆளணி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 |
| கட்புல கலைகள் | | 379 | 492 | 35 | 38 | 01 | 01 | 20 | 09 | 126 | 127 | 32 | 31 |
| நடனம் மற்றும் நாடக கலை | நடனம் | 898 | 1190 | 58 | 64 | 15 | 11 | 04 | - | 71 | 20 | 23 | 23 |
| | நாடகம் | 164 | 234 | | | | | | | | | | |
| இசை | | 906 | 1208 | 38 | 44 | 17 | 15 | 02 | - | 46 | 56 | 18 | 21 |
| **மொத்தம்** | | **2347** | **3124** | **131** | **146** | **33** | **27** | **26** | **09** | **243** | **203** | **73** | **75** |

### 04.03 மாணவர்கள் பற்றிய விபரம்

**இளமாணிப் பட்டம் - 2021**

| பீடம் | பட்டப் பாடநெறி | | அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | இறுதி ஆண்டு |
| கட்புல கலை பீடம் | சித்திரக் கலை | | 97 | 19 | 17 | 24 |
| | சிற்பக் கலை | | 2018/2019 | 08 | 11 | 07 |
| | கட்புல தொடர்பாடல் ஆக்கக் கலை | | 111 | 11 | 10 | 11 |
| | மட்பாண்டக் கலை | | 2019/2020 | 09 | 07 | 05 |
| | பல்வித அறிவியல் ஆற்றல் கலை | | | 10 | 11 | 09 |
| | ஆடை மற்றும் அணிகலன் கலை | | | 12 | 11 | 09 |
| | வரலாறு மற்றும் கலைக் கோட்பாடுகள் | | | 05 | 11 | 09 |
| | பல்லூடகக் கலை | | | 13 | 10 | 11 |
| | அச்சிடல் கலை | | | 08 | 08 | 08 |
| **மொத்தம்** | | | **208** | **95** | **96** | **93** |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம | மேல் நாட்டு நடனம் | | | 89 | 89 | 87 |
| | கீழ் நாட்டு நடனம் | | | 33 | 43 | 35 |
| | சப்ரகமுவ நடனம் | | | 15 | 23 | 18 |
| | இன்னிசை (சிம்பொனி) | | | 05 | 04 | 06 |
| | இந்திய மற்றும் ஆசிய நடனம் | | | | | |
| | | கதையுடனான நடனம் | | 22 | 09 | 09 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பரத நாட்டிய நடனம் | 242 2018/2019 | 11 | 05 | 05 |
| | நடன அரங்கேற்றக் கலை வரலாறு மற்றும் கோட்பாடுகள் | | | | | |
| | | வீடியோ நடனம் | 289 2019/2020 | 27 | 12 | 17 |
| | | தொடர்பாடல் மற்றும் நாட்டுப்புறவியல் | | 25 | 25 | 18 |
| | | டிஜிட்டல் சினிமா | | 12 | 08 | 08 |
| | நாட்டியக் கலை, பாலே நாட்டியம் மற்றும் நவீன நடனங்கள் | | | | | |
| | | நடிப்பு மற்றும் செயல்திறன் பயிற்சி | 49 2018/2019 | 33 | 26 | 23 |
| | | நாடக அமைப்பு மற்றும் இயக்கம் | 71 | 11 | 04 | 04 |
| | | பாலே நடனம் மற்றும் நவீன நடனம் | 2019/2020 | 05 | 09 | 05 |
| **மொத்தம்** | | | **651** | **288** | **257** | **235** |
| இசை | வட இந்திய இசை | | 295 2018/2019 241 2019/2020 | 81 | 92 | 114 |
| | தென்னிந்திய இசை | | | 02 | 03 | 06 |
| | மேலைத்தேய இசை | | | 34 | 41 | 34 |
| | மானிட பண்பாட்டியல் இசை | | | 36 | 42 | 29 |
| | பிரயோக இசை மற்றும் வெகுசன தொடர்பாடல் | | | 47 | 14 | 11 |
| | இசை அறிவியல் | | | 40 | 19 | 27 |
| **மொத்தம்** | | | **536** | **240** | **211** | **221** |

### 04.04 இளமாணிப் பட்டம் சம்பந்தமாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் ஒப்பீட்டு ரீதியிலான விபரம்

| பீடம் | | அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | பட்டம் பெற்று வெளியோரின் எண்ணிக்கை | | பட்டத்தை நிறைவு செய்யாத எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 |
| கட்புல கலை | | 96 | 111 | 95 | * | 03 | * |
| நடனம் மற்றும் நாடகம் | நடனம் | 240 | 289 | 244 | * | 03 | * |
| | நாடகம் | 49 | 70 | | | | |
| இசை | | 234 | 295 | 202 | * | 25 | * |
| **மொத்தம்** | | **619** | **765** | **541** | * | **31** | * |

* கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக இந்த ஆண்டில் மாணவர்கள் பட்டம் பெறவில்லை

## 05 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்

| பாடநெறியின் பெயர் | 2021 ஆம் ஆண்டில் அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 2021 ஆம் ஆண்டில் பட்டப் படிப்பை நிறைவு செய்தோரின் எண்ணிக்கை | பட்டப்பின் படிப்பு ஆய்வுக் கட்டுரையை மதிப்பீட்டுக்காக சமர்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தத்துவவியல் முதுமாணிப் பட்டம் (M.Phil) | 04 | 03 | 03 |
| கலாநிதி (Ph.D) | 01 | 03 | 04 |
| முது கலைமாணி (MA) | - | 03 | - |
| ஆற்றுகைக் கலை முதுமாணி (MPA) | - | 03 | - |

## 06 வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் தற்போது நடாத்தப்படும் பாடநெறிகள் பற்றிய விபரம்

| பாடநெறியின் பெயர் | கல்வியாண்டு | அனுமதி | பாடநெறிக் காலப்பகுதி | பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நடனம் பற்றிய டிப்ளோமா | 2019/2020 | (1 ஆவது அனுமதி) | 1 வருடம் | 64 |
| நடனம் பற்றிய டிப்ளோமா | 2019/2020 | (2 ஆவது அனுமதி) | 1 வருடம் | 46 |
| நடனம் பற்றிய டிப்ளோமா | 2020/2021 | | 1 வருடம் | 35 |
| சித்திரக் கலை மற்றும் ஓவியக் கலைப் பாடநெறி | 2019/2020 | (1 ஆவது அனுமதி) | 1 வருடம் | 40 |
| சித்திரக் கலை மற்றும் ஓவியக் கலைப் பாடநெறி | 2019/2020 | (2 ஆவது அனுமதி) | 1 வருடம் | 40 |
| கீழைத்தேய இசை பற்றிய டிப்ளோமா (பாடல்) | 2020/2021 | | 1 வருடம் | 22 |

## 07 மாணவர் உதவித் தொகை மற்றும் மாணவர்களுக்கான செலவு பற்றிய விபரம்

### 07.01 மஹபொல மற்றும் மாணவர் உதவு தொகையைப் பெற்றுக்கொள்வோர் பற்றிய விபரம் (2021)

| பீடம் | | மஹபொல புலமைப் பரிசில் பெறுவோர் | | மாணவர் உதவு தொகை பெறுவோர் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ.) | எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ.) |
| கட்புல கலை | | 222 | 10,017,700.00 | 151 | 3,880,000.00 |
| நடனம் மற்றும் நாடகம் | நடனம் | 455 | 22,747,000.00 | 421 | 11,471,000.00 |
| | நாடகம் | 63 | 3,150,000.00 | 97 | 1,888,000.00 |
| இசை | | 279 | 13,990,500.00 | 299 | 8,240,000.00 |
| **மொத்தம்** | | **956** | **49,905,200.00** | **968** | **25,479,000.00** |

## 07.02 மாணவர்களுக்கான செலவுகள் (2021)

| | |
|---|---|
| மொத்த மீண்டெழும் செலவினம் | 1,110,985,082.00 |
| மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 3124 |
| ஒரு மாணவருக்கான வருடாந்த செலவினம் | 355,629.02 |

## 08 விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள விதம் (2021)

| விடுதியின் பெயர் | தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| தெஹிவளை ஆண்கள் விடுதி | 76 | 382 |
| தெஹிவளை பெண்கள் விடுதி | - | |
| ராஜகிரிய பெண்கள் விடுதி | 306 | |

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை - 1524
விடுதி வசதிகளைப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை -382 (ஒரு மாதத்திற்கு)

தனியார் விடுதிகளில் இருக்கின்றனர் என அனுமானிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை - *
புகையிரத பருவகால சீட்டை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை - *
இ.போ.ச. பருவகால சீட்டை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை - *

* கொவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக சூம் தொலைத் தொடர்பு (Zoom teleconferencing) மென்பொருளைப் பயன்படுத்தி கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| விடுதி வசதிகளை வழங்க முடியுமான எண்ணிக்கை | 1524 |
| ஆண் | 400 |
| பெண் | 1124 |

## 09. ஆளணி பற்றிய விபரம்

### 09.1 கல்விசார் / கல்விசார் உதவி மற்றும் ஆளணி

| | சம்பளக் குறியீடு | சேவை மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது பணியாற்றும் ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| விரிவுரையாளர் | U - AC 3 (I) -(IV) | சிரேஷ்ட மட்டம் | 178 | 144 | 23 |
| துணைப் பேராசிரியர் | U - AC 4 | சிரேஷ்ட மட்டம் | | 03 | |
| பேராசிரியர்/ சிரேஷ்ட பேராசிரியர | U - AC 5 | சிரேஷ்ட மட்டம் | | 08 | |
| கல்விசார் உதவி - பிரிவு 1 | U- AS 1** | மூன்றாம் நிலை மட்டம் | 76 | 27 | 27 |
| கல்விசார் உதவி - பிரிவு 2 | U- AS 2 | மூன்றாம் நிலை மட்டம் | 15 | 10 | 05 |

** பல்கலைக்கழகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கமைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அலுவலர்களுக்கு தனிப்பட்ட வகையில் அங்கீகரிக்கும் அடிப்படையில் 38 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட 38 பதவிகளில் (அலுவலர்களுக்கு தனிப்பட்ட வகையில் அங்கீகரிக்கும் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட) 16 அலுவலர்கள் மாத்திரமே நியமக்கப்பட்டுள்ளனர். 27 பதவிகளுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 16 ஆலோசகர்கள் மற்றும் காட்சிப்படுத்துனர்கள், 10 உதவி இசைக்கலைஞர்கள், ஒரு விஞ்ஞான உதவியாளர் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர். இது தவிர 27 உதவி இசைக்கலைஞர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

## 09.02 நிருவாக மற்றும் நிதிசார் அலுவலர்கள்

| பதவி | சம்பளக் குறியீடு | சேவை மட்டம | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | பணியாற்றும் ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| பதிவாளர் | U-EX3(I) | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| நிதிப் பொறுப்பாளர் (Bursar) | U-EX3 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| வேலைப் பொறியியலாளர் | U-EX 1 / U-EX2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் /பிரதிப் பதிவாளர் | U-EX 2 | சிரேஷ்ட மட்டம் | 7 | 5 | 2 |
| சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் / பிரதி நிதிப் பொறுப்பாளர் | U-EX 2 | சிரேஷ்ட மட்டம் | 2 | 5* | 0 |
| சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் | U-EX 2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| உதவிப் பதிவாளர் | U-EX1 | மூன்றாம் நிலை மட்டம் | 9 | 8 | 1 |
| உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல்) | U-EX1 | மூன்றாம் நிலை மட்டம் | 1 | 1 | 0 |
| உதவி உள்ளக கணக்காய்வாளர் | U-EX1 | மூன்றாம் நிலை மட்டம் | 1 | 1 | 0 |
| உதவி நிதிப் பொறுப்பாளர் | U-EX1 | மூன்றாம் நிலை மட்டம் | 4 | 1 | 0* |
| தலைமை ஒழுக்காற்று அலுவலர் (Chief Marshal) | U-EX2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 |
| பொறுப்பாளர் (கலைக்கூடம்) - Curator (Arts Gellery) | U-EX1 | மூன்றாம் நிலை மட்டம் | 1 | 0 | 1 |
| கருத்திட்ட முகாமையாளர் | U-EX1 U-EX2 | சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 |
| மருத்துவ அலுவலர் | U-MO1 | மூன்றாம் நிலை மட்டம் | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் ( உடற்கல்வி) | U-EX2 | மூன்றாம் நிலை மட்டம் | 1 | 0 | 1 |
| **மொத்தம்** | | | **33** | **26** | **07** |

* APER பதவி உயர்வு

## 09.03 கல்விசாரா ஆளணி

| சேவைப் பிரிவு | சம்பளக் குறியீடு | ஊழியர்களின உண்மையான எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **ஆரம்ப மட்டம்** | | | | |
| ஆரம்ப சேவைப் பிரிவு - பயிற்சி பெற்ற | PL - 1 | 59 | 113 | |
| ஆரம்ப சேவைப் பிரிவு - பகுதியளவு பயிற்சி பெற்ற | PL - 2 | 06 | | 28* |
| ஆரம்ப சேவைப் பிரிவு - பயிற்சி பெறாத | PL - 3 | 20 | | |
| **இரண்டாம் நிலை மட்டம்** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | U - MN 1 | 100 | 117 | 07** |
| பதவிநிலை உதவியாளர் / சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர் | U - MN 4 | 10 | | |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சார் | U - MT 1 | 10 | 17 | 07 |
| முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத | U - MT 1 | 03 | 03 | |
| உதவி அலுவலர் - பிரிவு 2 | U - MN 2 | 01 | 02 | 01 |
| உதவி அலுவலர் - பிரிவு 2 தொழில்நுட்பம் சாராத | U - MN 3 | 03 | 03 | |
| உதவி அலுவலர் - பிரிவு 2 தொழில்நுட்பம் சார்ந்த | U - MN 3 | 03 | 03 | |

* பதவி வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்டது 01 பதவிகள்

** பதவி வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்டது 02 பதவிகள்

## 09.04 ஆராய்ச்சிக் கொடுப்பனவு பற்றிய விபரம்

| பீடம் / பிரிவு | ஆராய்ச்சிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை | ஆராய்ச்சிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | 60 | 02 |
| இசை பீடம் | 41 | 01 |
| கட்புல கலை பீடம் | 28 | 08 |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 03 | - |
| நிறைவேற்று தர அலுவலர் | 14 | 01 |
| நூலகம் | 04 | - |
| **மொத்தம்** | **150** | **12** |

## 09.05 கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணி இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள விதம்

| | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | உதவிப் பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர்/ விரிவுரையாளர் (சேவையில் உறுதிப்படுத்தப்படாத) | விரிவுரையாளர்(பயிலுனர்) | தற்காலிக உதவி விரிவுரையாளர் | ஆலோசகர் | உதவி இசைவாணர் | செய்முறையாளர் | வருகைதரு விரிவுரையாளர் | விஞ்ஞான உதவியாளர் (தரம் II) | உதவி கணனி வலையமைப்பு முகாமையாளர் -II | உடற் கல்வி ஆலோசகர் (தரம் I)/( தரம் III) | நிரற்படுத்துனர் மற்றும் முறைமை பகுப்பாய்வாளர் (தரம் I) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| துணைவேந்தர் | 01 | ஏற்புடையதாகாது | | | | | | | | | | | | | |
| இசை பீடம் | - | 01 | 01 | 32 | 04 | 06 | -- | 06 | 08 | -- | 56 | 01 | - | - | - |
| கட்புல கலை பீடம் | - | 01 | 02 | 17 | 01 | 17 | 09 | 01 | - | - | 127 | - | - | - | - |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | - | 04 | -- | 30 | 11 | 19 | -- | 07 | 02 | 02 | 20 | - | - | - | - |
| தகவல் தொழில்நுட்ப மையம் | - | - | - | 03 | - | - | - | 05 | - | - | - | - | 02 | - | - |
| உடற் கல்விப் பிரிவு | ஏற்புடையதாகாது | | | | | | | | | | | | | 02 | - |
| பரீட்சைகள் பிரிவு | ஏற்புடையதாகாது | | | | | | | | | | | | | | 01 |
| பல்துறை சார்ந்த ஆய்வுகள் | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - |

| | நூலகர் | சிரேஷ்ட உதவி நூலகர் | உதவி நூலகர் |
|---|---|---|---|
| நூலகம் | 01 | 03 | - |

## 09.06 நிர்வாக ஆளணி மற்றும் கல்விசாரா ஆளணி இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள விதம்

| பீடம் / பிரிவு | நிர்வாகம் | கல்விசாரா | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவ மற்றும் இணையான தரங்கள் | கனிஷ்ட தரங்கள் |
| கட்புலக் கலை பீடம் | 02 | 16 | 15 |
| நடனம் மற்றும் நாடக கலை பீடம் | 01 | 16 | 07 |
| இசை பீடம் | 01 | 15 | 06 |
| பட்டப்பின் படிப்பு கற்கை மையம் | 02 | 02 | 01 |
| துணைவேந்தர் அலுவலகம் | 01 | 03 | 02 |
| பதிவாளர் அலுவலகம் | 02 | 02 | 01 |
| கல்விசார் நிறுவனங்கள் பிரிவு | 01 | 05 | 02 |
| கல்விசாரா நிறுவனங்கள் பிரிவு | 01 | 03 | 01 |
| பரீட்சைப் பிரிவு | 01 | 06 | 01 |
| கல்விசார் மற்றும் மாணவர் விவகாரப் பிரிவு | 01 | 09 | 01 |
| பொது நிர்வாகப் பிரிவு | 01 | 05 | 07 |
| நிதிப் பிரிவு | 05 | 16 | 03 |
| ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் மேம்பாட்டுப் பிரிவு | 01 | 02 | 01 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 02 | 01 | 01 |
| சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு | 01 | 01 | 01 |
| உடற் கல்விப் பிரிவு | 00 | 01 | 01 |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் | 01 | 04 | 01 |
| கொஹுவலை வளவு | - | 01 | - |
| ஆளணி அபிவிருத்திப் பிரிவு | 00 | - | - |
| தொழில்சார் வழிகாட்டிப் பிரிவு | 00 | - | - |
| பல்கலைக்கழக மருத்துவ நிலையம் | 01 | 01 | 03 |
| பராமரிப்புப் பிரிவு | 01 | 03 | 17 |
| கூட்டு முகாமைத்துவப் பிரிவு | 00 | 01 | - |
| நூலகம் | 00 | 08 | 05 |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 00 | 02 | - |
| பாதுகாப்புப் பிரிவு | 00 | 04 | 07 |
| மூலதனப் பணிகள் பிரிவு | 01 | 01 | - |
| VAPA பல்கலைக்கழக அச்சகம் | - | 02 | - |

## 09.07 ஆளணியில் ஏற்பட்ட மாற்றங்கள்

| | கல்விசார் | கல்விசார் உதவி | நிர்வாகம் மற்றும் நிதி | கல்விசாரா |
|---|---|---|---|---|
| புதிய நியமனங்கள் | 17 | 05 | 00 | 12 |
| சேவையில் உறுதிப்படுத்தல் | 04 | 00 | 02 | 26 |
| பதவி உயர்வுகள் | 09 | 01 | 00 | 15 |
| இடமாற்றல்கள் (வேறு பல்கலைக்கழகத்திலிருந்து) | 00 | 00 | 00 | 07 |
| ஓய்வு பெறல் | 00 | 02 | 01 | 03 |
| இராஜினாமா | 00 | 00 | 00 | 01 |
| பதவி வெறிதாக்கல் | 00 | 00 | 00 | 01 |
| சேவை இடைநிறுத்தம் | 00 | 00 | 00 | - |
| சேவையை முடிவுறுத்தல் | 01 | 00 | 00 | - |
| பணி நீக்கம் | 00 | 00 | 00 | - |
| ஓய்வு விடுமுறை | 03 | ஏற்புடையதாகாது | 01 | - |
| கல்விசார் விடுமுறை (உள்நாடு) | 06 | 01 | 00 | - |
| கல்விசார் விடுமுறை (வெளிநாடு) | 03 | 00 | 00 | - |
| கல்விசார் விடுமுறை நீடிப்புக்கள் | 02 | 00 | 00 | - |
| ஓய்வு விடுமுறை முடிவடைந்து சேவைக்கு சமுகமளித்தல் | 06 | 00 | 01 | - |
| கல்விசார் விடுமுறை முடிவடைந்து சேவைக்கு சமுகமளித்தல் | 02 | 00 | 01 | - |
| மரணம் ஏற்படல் | 01 | 00 | 00 | - |

## 10. ஆளணி அபிவிருத்தி

### 10.01 ஆளணி அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

#### 10.01.01 கல்விசார் ஆளணி அபிவிருத்தி

| செயலமர்வு | திகதி | வளவாளர் |
|---|---|---|
| கல்விசார் ஆளணி அலுவலர்களுக்கான ஆராய்ச்சி (கட்புலக் கலை பீடம்) | 18.03. 2021 | பேராசிரியர் சலிந்த பெனரகம / பேராதனைப் பல்கலைக்கழகம் |
| கல்விசார் ஆளணி அலுவலர்களுக்கான ஆராய்ச்சி (நடனம் மற்றும் நாடகக் கலை பீடம்) | 30.03.2021 | பேராசிரியர் சலிந்த பெனரகம / பேராதனைப் பல்கலைக்கழகம் |
| கல்விசார் ஆளணி அலுவலர்களுக்கான ஆராய்ச்சி (இசை பீடம்) | 31.03.2021 | பேராசிரியர் சலிந்த பெனரகம / பேராதனைப் பல்கலைக்கழகம் |
| உயர் கல்விக்கான கற்பித்தல் சான்றிதழ் பாடநெறி (CTHE) | 30.03.2021-17.09.2021 | விரிவுரையாளர் குழுவொன்று |
| இலங்கை தகைமை சட்டகம் (SLQF) | 12.03.2021 | பேராசிரியர் கொலின் என். பீரிஸ் / இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் |
| கொள்கை மற்றும் இடைக்காலச் சட்டங்கள் மேம்பாடு | 17.06.2021-23.06.2021 | பேராசிரியர் கொலின் என். பீரிஸ் / இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரப்படுத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டம் | 01.03.2021 | பேராசிரியர் கொலின் என். பீரிஸ் / இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் |

78

## 10.01.02 கல்விசாரா ஆளணி அபிவிருத்தி

| செயலமர்வு | திகதி | வளவாளர் |
|---|---|---|
| கல்விசார் ஆளணிக்கான செயலமர்வு | 2021.04.08 | கலாநிதி ரசிக்க பிரியங்கர/ சிரேஷ்ட விரிவுரையாளர்/ இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| அனைத்துத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் செவிப்புல கட்புல தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம் | 2021.08.31 முதல் | விரிவுரையாளர் குழுவொன்று |
| கோப்புக்கள் முகாமைத்துவம், இணையவழி வளங்கள் மற்றும் சேவைகளை பயன்மிக்க வகையில் பயன்படுத்தல் | 2021.11.15 முதல் | திரு.சமன் கிராகடுவ, சிரேஷ்ட உதவி நூலகர் / கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் |
| கல்விசாரா ஆளணிக்கு தகவல் தொழில்நுட்ப அடிப்படை விடயங்கள் | 2021.12.10 முதல் | கலாநிதி அனூஷ ஜயசிரி, சிரேஷ்ட விரிவுரையாளர் / கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம், திருமதி கமனி சமரசிங்க சிரேஷ்ட விரிவுரையாளர்/ கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் |
| கல்விசாரா ஆளணிக்கு தகவல் தொழில்நுட்ப அடிப்படை விடயங்கள் | 2021.12.31 முதல் | கலாநிதி அனூஷ ஜயசிரி, சிரேஷ்ட விரிவுரையாளர் / கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம், திருமதி கமனி சமரசிங்க சிரேஷ்ட விரிவுரையாளர்/ கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் |

## 10.02 பல்கலைக்கழக ஆளணி அங்கத்தவர்கள் பங்குபற்றிய கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள்

| செயலமர்வு | திகதி |
|---|---|
| இலங்கை மன்றக் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழிக் கற்பித்தல் முறைகள் பற்றிய செயலமர்வு | 2021 மே மாதம் 7, 8, 14 மற்றும் 15 ஆம் திகதிகள் |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாட்டினூடாக சேவை நிலையத்தின் விளைதிறனை மேம்படுத்திக்கொள்ளல் | 2021 ஒக்தோபர் மாதம் மாதம் 11, 18, 25 ஆம் திகதிகள் |

## 10.03 பல்கலைக்கழகத்தின் நூலக ஆளணியினர் பங்குபற்றிய கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள்

| இல. | கருத்தரங்கு/ பயிற்சித் திட்டம் | நிறுவகம் | நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய ஆளணி அங்கத்தவர்கள் |
|---|---|---|---|
| 01 | புதிய இயல்புநிலையின் கீழ் நூலகத்திற்கான சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் | தேசிய நூலகங்கள் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம் | நூலகர் |
| 02 | நூலக ஆராய்ச்சி பற்றிய கல்விசார் கருத்தரங்கு | கொழும்புப் பல்கலைக்கழகம் | நூலகர் |
| 03 | இணையத்தள மேம்பாடு பற்றிய இரண்டு நாள் இயலளவு மேம்பாட்டுத் திட்டம் | பல்கலைக்கழக நூலகர் சங்கம் | ஜீ எம் எஸ் குமார, சிரேட்ட உதவி நூலகர் மற்றும் ஏ வீ எம் கே அங்கும்புற, சிரேட்ட உதவி நூலகர் |

## 11. உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம்

| உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம் | மொத்த செலவின மதிப்பீடு (ரூபா மில்.) | 2021 ஆம் ஆண்டில் செலவு (ரூபா மில்.) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|
| இசை பீடம் மற்றும் பல்கலைக்கழக பொது வசதிகள் கட்டிடத் தொகுதி | 775 | 143.97 | கட்டிட நிர்மாணப் பணிகள் குறிப்பிடத்தக்களவு நிறைவு செய்யப்பட்டு 99% முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. |
| கட்புலக் கலைகள் பீடத்திற்கான கட்டிடம் மற்றும் தளவமைப்பை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் | 492 | 51.03 | கட்டிட நிர்மாணப் பணிகள் குறிப்பிடத்தக்களவு நிறைவு செய்யப்பட்டு 98% முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. |

## 12. நூலகத்தின் நூல்கள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான விபரம் 2020 / 2021

| | 2020 | 2021 |
|---|---|---|
| நூல்கள் | 58122 | 58447 |
| சஞ்சிகைகள் | - | 16 |
| புதிதாக சேர்க்கப்பட்டவை | 336 | 325 |

## 13. மூலோபாயத் திட்டம் மற்றும் செயல் திட்டத்துடன் தொடர்பான தகவல்கள்

### 13.01 மூலோபாயத் திட்டம்

2021-2023 ஆண்டுகளுடன் தொடர்புடைய வகையில் தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டம் 2021 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 13.02 செயல் திட்டம்

**2021** ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் 2021 - 2023 ஆம் ஆண்டிற்குப் பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்று நோய் காரணமாக காலாண்டு ரீதியில் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் தாமதமேற்பட்டது.

ஆனாலும், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளுடன் தொடர்புடைய செயல் திட்டத்தினது அலுவல்களின் முன்னேற்றம் அறிக்கைப்படுத்தப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டிற்கான ஒன்றிணைந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. மூலோபாயத் திட்டமிடல் முகாமைத்துவக் குழு மற்றும் நிருவாக சபைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான ஒன்றிணைந்த செயல் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் அதனை பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புபடுத்தும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 14. தொழில்சார் வழிகாட்டிப் பிரிவுடன் தொடர்பான தகவல்கள்

1. 2021 ஆம் ஆண்டில் பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்கள் பற்றிய கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ளல்.
2. தொழில்சார் வழிகாட்டிப் பிரிவுக்காக தொழில்சார் வழிகாட்டி ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்த்துக்கொள்ளல்.
3. தொழில்சார் வழிகாட்டிப் பிரிவின் மாணவர் கையேட்டைத் தயாரிப்பதற்காக குழுவொன்றை நியமித்தல்.
4. தொழில்சார் வழிகாட்டிப் பிரிவின் இணையத்தளத்தை புதிதாகத் திட்டமிடல்.
5. 2021 மாணவர் கையேட்டின் தகவல்களை திருத்தியமைத்தல்.

## 15. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

கொவிட் 19 தொற்று நோய் காலப் பகுதியினுள் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினால் Zoom தொடர்பாடல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் கற்றல் முகாமைத்துவ முறைமையை பயன்படுத்தி 2018/2019 மற்றும் 2019/2020 கல்வியாண்டுகளில் விரிவுரைகளை சிறப்பாக நடாத்துவதற்காக கல்விசார் ஆளணி, கல்விசார் உதவி ஆளணிக்கு மற்றும் மூன்று பீடங்களினதும் அனைத்து மாணவர்களுக்கும் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப நிலையம் ஆளணி அபிவிருத்தி நிலையத்தின் ஒத்துழைப்படன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளும் விதம் மற்றும் கணனிகளை பயன்மிக்க வகையில் பயன்படுத்தும் விதம் சம்பந்தமாக ஆளணி அங்கத்தவர்களுக்காக சில பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் மூன்று பீடங்களினதும் புதிய மாணவர்களுக்காக பரிந்துரை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் சில தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளை நடாத்துவதற்காக தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது. மேலும், அரச நாடக விழா, இசைக் கருவிகளை இசைத்தல் சம்பந்தமாக ICTM ஆய்வுக் குழுவின் 23 ஆவது கல்விக் கருத்தரங்கு, பட்டத்தேர்வுநாடி ஆராய்ச்சி கல்விசார் கருத்தரங்கு - 2021, ISME மூன்றாவது தெற்காசியப் பிராந்திய மாநாடு, இணையவழி கல்விசார் ஆராய்ச்சிக் கருத்தரங்கு - 2021 ( பட்டப்பின் படிப்பு கற்கைப் பீடம்) இற்கும் தொழில்நுட்ப ரீதியிலான உதவி வழங்கப்பட்டது. அத்தோடு நிருவாக சபையின், மூதவையின், நிதிக் குழுவின், பிரதான மாணவர் சங்கக் கூட்டங்கள், விடுமுறைகள் மற்றும் விருதுகள் குழு, கணக்காய்வுக் குழுக் கூட்டம், சட்டப் பிரிவின் விசாரணைகள் மற்றும் சில நேர்முகத் தேர்வுகளை நடாத்துதல் போன்ற விடயங்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஒத்துழைப்பு 2021 ஆம் ஆண்டு பூராவும் தொடர்ச்சியாகப் பெற்றக்கொடுக்கப்பட்டது.

## 16. சீ. டி எஸ். குலதிலக்க காப்பகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுடன் தொடர்பான அலுவல்கள்

| செயற்பாடு | திகதி |
|---|---|
| கற்பனை<br>(கற்பனை தொடர்பான கல்விசார் உரையாடல்) | 2021 பெப்ருவரி 06 |
| மாணவர்களுக்கான மூன்றாவது கல்விசார் ஆராய்ச்சிக் கருத்தரங்கு | 2021 யூலை 14 |
| மாணவர்களின் கல்விசார் ஆராய்ச்சிக் கருத்தரங்கு - 21 ஆய்வுக் கட்டுரைகள் | 2021 யூலை 14 |
| அருவமான கலாசார மரபுரிமைகள் பற்றிய விரிவுரைத் தொடர் | 2021 ஒக்தோபர் 29<br>(வளவாளர் - கலாநிதி எல்.டெனிஸ்ட்டர் பெரேரா) |
| | 2021 திசெம்பர் 14<br>சிரேஷ்ட பேராசிரியர் திரு.ராஜ் சோமதேவ |
| சீ டி எஸ் குலதிலக்க ஞாபகார்த்த கருத்தரங்கு | 2021 திசெம்பர் 14 |
| சீ டி எஸ் குலதிலக்க பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் ஆராய்ச்சி ஜர்னலை வெளியிடல் | 2021 திசெம்பர் 14 |
| சீ டி எஸ் குலதிலக்க பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் நடவடிக்கைகள் - இணையத்தளத்தை ஆரம்பித்தல் | 2021 திசெம்பர் 14 |



**சீ. டி எஸ் குலதிலக்க ஆவணக் காப்பகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி சஞ்சிகையை வெளியிட்டுவைக்கும் வைபவத்தின்போது பிரதான உரையை நிகழ்த்திய பேராசிரியர் திரு.ராஜ் சோமதேவ அவர்கள்.**

## 17. தர உத்தரவாத மையம் (CQA)

- ❖ சகல பீடங்களுக்கும் மாணவர் பின்னூட்டலைப் பெற்றுக்கொள்வதற்கான படிவங்கள் தயாரிக்கப்பட்டன.
- ❖ இணை அவதானிப்புக்கள் படிவமொன்று தயாரிக்கப்பட்டது.
- ❖ கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்காக Zoom ஒழுக்கநெறிகள் பற்றிய அறிவுறுத்தல் தொடர்.
- ❖ பல்கலைக்கழகத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள் / துணைச் சட்டங்கள் / நோக்கப் பிரகடனங்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, கொள்கைகள் 33 / துணைச் சட்டங்கள் / நோக்கப் பிரகடனங்களை திட்டமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. 33 கொள்கைகளில் 21 கொள்கைகள் சம்பந்தமாக குழுக்களை நியமித்து தர உத்தரவாத நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பான முதலாவது மீளாய்வை குறித்த குழுத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- ❖ உத்தேச கல்விசார் மற்றும் நிருவாகக் கொள்கைச் சட்டகம் சம்பந்தமாக குழுத் தலைவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் 2021.06.17 மற்றும் 2021.06.23 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

- ❖ நிதி உருவாக்கல் குழுவை தாபித்தல்
- ❖ 2021 ஆம் ஆண்டில் தரப் பாதுகாப்பு சம்பந்தமாக மூதவையின் நிலையான குழுவினால் 10 கூட்டங்களிள் நடாத்தப்பட்டன.

**18. உடற்கல்விப் பிரிவின் செயற்பாடுகள்**

1. கட்புலக் கலைகள் பீடத்தின் புதிய மாணவர்களுக்காக விளையாட்ட மற்றும் உடற் கல்வி சம்பந்தமான அறிமுகப்படுத்தும் நோக்குநிலை நிகழ்ச்சித் திட்டம் 2021.07.01 ஆம் திகதி Zoom தொழில்நுட்பத்தினூடாக நடாத்தப்பட்டது.

2. 2021 செப்தெம்பர் மாதம் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் 20 மாணவர்கள் Zoom தொழில்நுட்பத்தினூடாக கலந்துகொண்டார்கள்.

3. சதுரங்கப் பலகை (Chess) (பெண்/ ஆண்), தய்கொண்டோ (பெண்/ ஆண்) மற்றும் கராத்தே (பெண்/ ஆண்) விளையாட்டுக்களுக்காக 2021 சர்வதேச பல்கலைக்கழகப் போட்டிகளுக்காக அணிகளை பங்கேற்கச் செய்யப்பட்டன.

   I. மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2021.11.06 மற்றும் 07 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட சதுரங்கப் பலகை (Chess) (பெண்/ ஆண்) போட்டிகள்.

   II. களணிப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2021.11.11,12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட தய்கொண்டோ (பெண்/ ஆண்) போட்டிகள்

   III. பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2021.11.10 முதல் 2021.11.26 நடாத்தப்பட்ட கராத்தே (பெண்/ ஆண்) போட்டிகள்.

      - ❖ பெண்கள் பிரிவின் 04 ஆவது மட்டக் கராத்தே போட்டியின் வெண்கலப் பதக்கம் - கட்புலக் கலைகள் பீடம்

4. இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2021.12.06 முதல் 2021.12.09 வரை நடாத்தப்பட்ட 04 நாள் தேசிய ஒலிம்பிக் பயிற்சித் திட்டத்தில் இரண்டு மாணவர்கள் பங்குபற்றினர்.
   i. ஏ ஜீ எஸ் எஸ் குணசேக்கர – (DD/16/038)
   ii. எம் ஜீ கே எஸ் துமுலவீர – (MU/17/110)

5. இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டமை.

6. உடற் கல்விப் பிரிவுக்கு நிதி ஏற்பாடு மற்றும் ஏனைய தேவையான தகவல்களை வழங்குதல் சமபந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் Zoom தொழில்நுட்பத்தினூடாக நடாத்தப்பட்ட விளையாட்டு மற்றும் உடற்கல்வி சம்பந்தமான நிலையான குழுக் கூட்டத்தில் பங்குபற்றியமை.

7. கட்புலக் கலைகள் பீடத்தின் உடற்கல்விக்கான அலுவலகம் கட்புலக் கலைகள் பீடத்திலிருந்து அல்பிரட் கிரசென்ட் வளவில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதுடன் அல்பிரட் கிரசென்ட் வளவில் அமைந்துள்ள புதிய உடற் கட்டமைப்பு நிலையம் (new strength hall) மீளத் திட்டமிடப்பட்டது.

## 19. தகவல் பிரிவு

பல்கலைக்கழகம் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் மற்றும் பிரச்சாரம் செய்யும் முன்னணி நிறுவனமொன்றாக தகவல் பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளுகின்றது.

கொவிட் 19 தொற்று நோய் நிலவிய காலப் பகுதியினுள் பல்கலைக்கழக இணையத்தளத்தினால் முக்கிய அலுவல்கள் நிறைவேற்றப்பட்டன. பல்கலைக்கழக இணையத்தளம் உள்ளகத் தரப்புக்கள் மற்றும் வெளித் தரப்புக்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு பல்வேறு மொடியூல்களைக் கொண்டுள்ளது.

**கட்புலக் கலைகள் பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தின் பிரதான பகுதிகள்**

**பல்கலைக்கழகத்தின் இணையத்தளம்** - பல்கலைக்கழகத்தின், அதன் பிரிவுகள் மற்றும் சேவைகள் சம்பந்தமான முக்கிய தகவல் மூலங்கள்.

கல்விசார் தகவல்களை வழங்குதல் மற்றும் இணையவழி விரிவுரைகளை நடாத்துவதற்காக கற்றல் முகாமைத்துவ முறைமை

**இலத்திரனியல் படிவங்கள் (E- forms)** : கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் ஆளணிக்காக பல்வேறுபட்ட இலத்திரனியல் படிவங்கள் வழங்கப்படுகின்றன.

**இணையவழிக் கொடுப்பனவுகள் :** மாணவர்களுக்கு மற்றும் ஏனைய தரப்புக்களுக்கு தமது கொடுப்பனவு நடவடிக்கைகளை பல்கலைக்கழக இணையவழி ஊடாக மேற்கொள்ள முடியும்.

**இணையவழி மாணவர் பதிவு** : பல்கலைக்கழகத்தில் பதிவு செய்வதற்காக மாணவர்களுக்கு இணையத்தளத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் (இணையத்தளத்தினூடாக தேவையான படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கையளித்தல் மற்றும் இணையவழி ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்).

## 20. கட்புல ஆற்றுகைக்கலைகள் பல்கலைக்கழக அச்சகம் (VAPA)

உயர் தரமானதும் நீண்ட கால இருப்பைக் கொண்ட கல்விசார் வெளியீடுகளை வழங்குவதனூடாக இலங்கையில் கல்விசார் வெளியீடுகள் சம்பந்தமான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 2021 ஜனவரி மாதம் 13 ஆம் திகதி VAPA தாபிக்கப்பட்டது.

VAPA கல்விசார் மற்றும் படைப்பாற்றல் மிக்க ஆவணங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக வெளியிடுவதற்குக் கருதுகின்றது. VAPA அந்தப் பல்கலைக்கழகத்தின் அச்சிடல் நடவடிக்கைகள் மாத்திரமன்றி இலங்கையின் கற்றறிந்த சமூகத்தின் மற்றும் கவின்கலை துறைகளில் போன்றே ஏனைய இணையான துறைகளில் இளைஞர் மற்றும் அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுனர்களின் அச்சிடல் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அதன் பெறுபேறாக VAPA வினால் 2021 ஆம் ஆண்டில் சிங்கள மொழியில் ஏழு நூல்கள் வெளியிடப்பட்டன. மேலும், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக முகாமைத்துவத்தினால் 14 புதிய வெளியீடுகளுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 21. பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு (University Business Linkage Cell )

கைத்தொழில் துறைத் தரப்புக்களின் ஒத்துழைப்புடன் அழகியற் கலைத் துறையில் பல்கலைக்கழக புத்தாக்க வர்த்தக மயப்படுத்தலுக்கு வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. உணர் கல்வியின் போக்கு மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் திட்டத்தின் ஒத்துழைப்புடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் இந்தப் பிரிவு தாபிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு கல்வியின் போக்கு மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் திட்டத்தின் (AHEAD) 03 ஆவது கட்டம், 4 ஆவது கட்டம் (இறுதிக் கட்டம்) எனும் கட்டங்களை அடைவதற்காக சபையின் மதிப்பீட்டு மீளாய்வு மற்றும் உயர் பரிந்துரையுடன் சிறப்பான வகையில் நிறைவு செய்யப்பட்டதுடன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஒப்படைகளை வர்த்தக மயப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு 13 மில்லியன் ரூபா தொகை வழங்கப்பட்டது. பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு பல்வேறுபட்ட கருத்திட்டங்களில் ஈடுபடுவதுடன் இலங்கை வர்த்தக சபை, தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் மற்றும் சிறுவர் நிதிய அமைப்புக்களுடன் 03 கைத்தொழில் ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டது. இந்த அடிப்படை அலுவலக்களின் முக்கிய நோக்கம் என்னவெனில், கைத்தொழில் ஒப்படை வர்த்தகமயப்படுத்தல் முயற்சிகளுக்காக பல்கலைக்கழகம் மற்றும் தொடர்புடைய கைத்தொழில்துறை தரப்புக்களிடையிலான தொடர்புகளை பலப்படுத்துவதாகும்.

அத்தோடு பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் செரமிக் பிரிவின் புதிய உற்பத்தியொன்றுக்காக தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்துடன் இணைந்து முதன் முறையாக பல்கலைக்கழக காப்புரிமை அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை அனுப்புவதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தினூடாக புலமைச் சொத்துக்கள் சம்பந்தமாக அறிந்திருத்தல் மற்றும் வர்த்தக மயப்படுத்தலில் ஈடுபடுவதற்குத் திட்டமிடல் அந்தப் பிரிவின் திருப்புமுனையாகும்.


பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிரேட்ட பேராசிரியர் (கலாநிதி) திரு. ஆர். மஹலியனாரச்சி அவர்களின் அழைப்பின் பேரில் உலக வங்கி உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் AHEAD கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேட்ட பேராசிரியர் சீ.உடவத்த அவர்களின் அனுசரணையின் கீழ் “பல்கலைக்கழக வணிக இணைப்பு இணையத்தளம் மற்றும் படைப்பாற்றல் கலைகள் ஆவணப்படுத்தல் முறைமை” வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வணிக இணைப்புப் பிரிவு தொழில் முயற்சியாண்மை, புலமைச் சொத்துக்கள் மற்றும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்கு விண்ணப்பத்தை முன்வைத்தல் சம்பந்தமான அறிவை மேம்படுத்துவதற்கு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் கல்விசார் ஆளணிக்காக சில பயிற்சிப் பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இந்திய வணிக மற்றும் கைத்தொழில் சபையின் வர்த்தகம், தகவல்கள், அறிவு, கல்வி, இணையவழிக் கண்காட்சி மற்றும் இலங்கை வர்த்தக சபையின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களுக்காக இணையவழிக் கண்காட்சி போன்ற தேசிய மற்றும் சர்வதேச கண்காட்சிகள் ஊடாக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் புதிய உற்பத்திக் கண்காட்சி காட்சிப்படுத்தப்பட்டது.

கைவினைப் பொருட்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் வைபவத்திற்கு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் கட்புலக் கலை பீடத்தின் மட்பாண்டக் கலை கற்கைப் பிரிவின் மாணவர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட காட்சிப் பொருட்கள். இதில் ஒரு முதலாமிடம், இரண்டு இரண்டாமிடம், ஒரு மூன்றாமிடம் கிடைத்தது.



முதலாமிடம் : வீட்டு அலங்கார பாத்திரங்கள் சோடி



இரண்டாமிடம் : கலைச் சித்தரிப்பு



இரண்டாமிடம் : பச்சை நிறத்தினாலான தேநீர் பாத்திரம்



மூன்றாமிடம் : பூங்கா அலங்கார முகம்

22. சர்வதேச உறவுகளுக்கான மையம் **(CIR)**

1. சர்வதேச ஒத்துழைப்புடன் தொடர்புடைய அனைத்து அலுவலகளுக்கும் வசதிகளை வழங்குவதற்காக **கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஒத்துழைப்பு சம்பந்தமான கொள்கை அறிமுகஞ் செய்யப்பட்டது.**

2. சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய மேம்படுத்தப்பட்ட **அங்கீகாரத்தை வழங்கும் நடைமுறையின் பத்துக் கட்டங்கள்** உள்ளடங்கலாக சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளில் தெளிவு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

3. 2005 ஆம் ஆண்டு முதல் சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுக் குழாம் மேம்படுத்தப்பட்டது.

4. 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்று நோய் காரணமாக பல தடவைகள் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் காரணமாக பௌதிக ரீதியில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இணையவழித் தளத்தைப் பயன்படுத்தி கலந்துரையாடல்கள் மாத்திரம் நடைபெற்றது.

   - Selcuk University, Konya-Turkey - Mevlana பரிமாற்றல் உடன்படிக்கை பதிவேடு.
   - சீஷெல்ஸ் கலை மற்றும் திட்டமிடல் வடிவமைப்பு நிறுவனம் - சீஷெல்ஸ் கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிலவும் சீஷெல்ஸ் கலை மற்றும் திட்டமிடல் வடிவமைப்பு நிறுவனத்திற்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை.

5. சர்வதேச கலாச்சார ஒத்துழைப்புக்காக வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு கொய்தே நிறுவனத்தின் பணிப்பாளர் ஸ்டெபன் வின்க்லருடன் Karlsruhe இன் ZKM (கலை மற்றும் ஊடக நிறுவனம்) முதல் "உலக அரசியலின் பிரச்சினைக்குரிய வலயங்கள் சம்பந்தமான அவதானிப்பு நிலையம்" எனும் தலைப்பில் சுற்றுலாத்துறை கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது.

   (உலகின் பிரச்சினைக்குரிய வலய வலையமைப்புக்களுடன் தொடர்பான செயலமர்வுகள், ஆராய்ச்சி மற்றும் மேலும் செயற்பாடுகளுக்காக இந்தக் கண்காட்சி பூரணமாக திறந்து விடப்படுகின்றது).

6. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு மற்றும் மலேஷியாவின் Universiti Teknologi Mara இற்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

## 23. ஆராய்ச்சிக் கட்டுரைகளை முன்னிலைப்படுத்தல் - 2021

| | பெயர் | 2021 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட ஆராய்ச்சிப் பத்திரங்கள் |
|---|---|---|
| 01 | செல்வி நதீஷா வீரசிங்க (தகுதிகாண்) கட்புலக் கலைகள் பீடம் | 1. **பூகோள ரீதியிலான கல்வி ஆராய்ச்சி நிறுவகத்தின் சர்வதேச மாநாடு**<br>• தற்போதைய வடிவமைப்புப் போக்குகள் சம்பந்தமான பகுப்பாய்வு ரீதியிலான ஆய்வு<br>• ரஜகல வரலாற்றுப் புகழ்மிக்க தொல்பொருளியல் துறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முத்து மணிகளுடன் தொடர்புடைய திட்டமிடல் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை பற்றிய ஆய்வு<br><br>2. **அருவமான கலாச்சாரப் பாரம்பரியம் பற்றிய சர்வதேச மாநாடு**<br>• இலங்கையின் பாரம்பரிய கின்தர சன சமூகத்தின் அருவமான கலாச்சாரப் பாரம்பரியம் பற்றிய ஆய்வொன்றை வர்ணம் தீட்டல் செயற்பாட்டினூடாக மேற்கொள்ளல்.<br>• இலங்கையின் பாரம்பரிய ஆடைகளுக்கு வர்ணம் தீட்டும் நுட்பத்தின் அருவ கலாச்சார பாரம்பரியம் பற்றிய ஆய்வு |
| 02 | கலாநிதி மனோரஞ்சன ஹேரத், சிரேட்ட விரிவுரையாளர், கட்புலக் கலைகள் பீடம் | 1. **தேசிய தொல்பொருளியல் கல்விக் கருத்தரங்கு / 2021 இலங்கை**<br>• பொலன்னறுவை திவங்க பிலிமகே சிங்க உருவங்கள் |
| 03 | கலாநிதி சமன் பனாபிட்டிய, சிரேட்ட விரிவுரையாளர், பீடாதிபதி / இசைப் பீடம் | 1. **உலக அமெரிக்க சர்வதேச பல்கலைக்கழகம், பங்களாதேஷ்**<br>• இந்த விழாவுக்கு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தைப் |

| | | |
|---|---|---|
| | | பிரதிநித்துவப்படுத்தி படைப்பாற்றல் மிக்க இரண்டு நாட்டார் பாடல்கள் இசைக் கச்சேரிகள் நடாத்தப்பட்டன.<br>2. **ISME- தெற்காசியப் பிராந்திய மாநாடு - 2021 இசைப் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது சர்வதேச மாநாடு**<br>• இலங்கையின் உயர் இசைக் கல்வி பற்றிய இரு பரிமாண சபைக் கலந்துரையாடல்<br>3. **இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சர்வதேச கல்விசார் கருத்தரங்கு - 2021**<br>• தொற்று நோய்கள் சம்பந்தமான புராதன இலங்கையர்களின் பொதுச் சுகாதாரம்<br>4. **இணையவழி ஆராய்ச்சி கல்விசார் கருத்தரங்கு - 2021**<br>பட்டப்பின் படிப்பு கற்கைப் பீடம் / கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்<br>• சபை உறுப்பினர் மற்றும் சபை மதிப்பாய்வாளர் |
| 04 | கலாநிதி பிரியதர்ஷனீ பீரிஸ் பெரேரா, சிரேட்ட விரிவுரையாளர், இசைப் பீடம் | 1. **இசை, நடனம் மற்றும் நாடகக் கலை பற்றிய சர்வதேச மாநாடு - பிரதான உரை**<br>• இலங்கையின் படைப்பாற்றல் கலை கைத்தொழில் மற்றும் அத்துறை சம்பந்தமாக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு<br>2. **இசைத்துறைக் கல்விக்கான சர்வதேச கழகம்**<br>• பல்கலைக்கழகத்தின் இசைத்துறைக் கற்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் இசைத்துறை சார்ந்த முன்னிலைப்படுத்தல்களின்போது உணர்ச்சியை வெளிப்படுத்துவதனை மேம்படுத்துவதற்காக EmoGraphics பயன்பாட்டின் தாக்கம்: ஆராய்ச்சி ரீதியான கற்கையாகும்.<br>3. **சர்வதேச படைப்பாற்றல் ரீதியான பாடல் வரிகள் (லிரிக்ஸ்) மற்றும் கலாச்சார பியானோ வாசித்தல் ISME மாநாடு - "கலாச்சார மட்டுப்பாடு"**<br>• தனியாக பியானோ வாசித்தல் - "புகழ்ச்சிப் பாடல் மற்றும் வண்ணம்" கருப்பொருளை படைப்பாற்றல் மிக்க வகையில் ஒருங்கிணைத்து (Mash up) இலங்கையின் கலாச்சார ரீதியிலான ஒருங்கிணைந்த படைப்புக்கள்.<br>4. **கலாசாரங்களுக்கிடையிலான பியானோ கல்வித் திட்டம் - ஜேர்மன்**<br>செயலமர்வின் கலந்துரையாடல் - இலங்கையின் இசைத்துறைக் கல்வி முறையின் புதிய வளர்ச்சிப் போக்குகள் |

| | | |
|---|---|---|
| 05 | திருமதி அஜந்தா நிரோஷனீ, சிரேட்ட விரிவுரையாளர், ஆங்கில மொழி கற்கைப் பிரிவு | 1. **கல்வி மற்றும் கற்பித்தல் சம்பந்தமான இரண்டாவது உலகளாவிய மாநாடு**<br>• தெற்காசியப் பல்கலைக்கழக மாணவர்களின் இரண்டாம் மொழியாக ஆங்கில மொழி ஆவணங்களில் தாய் மொழியின் தாக்கம் |
| 06 | திருமதி கமனி சமரசிங்க, சிரேட்ட விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்ப நிலையம் | 1. **திறந்த பல்கலைக்கழகங்களின் ஆசிய சங்கத்தின் 34 ஆவது தேசிய மாநாடு**<br>• படைப்பாற்றல்மிக்க கலைகள் கல்வியின்போது மாணவர் மையக் கல்வியை ஊக்குவித்தல் : வகுப்பறையில் கோட்பாட்டு ரீதியான கற்பித்தலைத் தாண்டி மாணவர் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில்நுட்பமும் ஒருங்கிணைந்த கற்பித்தலைக் கொண்டிருத்தல்.<br><br>2. **பேண்தகு உயர் கணனி அறிவு பற்றிய சர்வதேச மாநாடு (ICSAC 2021)**<br>• கொவிட் 19 தொற்று நோய் நிலவிய காலப் பகுதியினுள் படைப்பாற்றல்மிக்க கலைக் கல்வியை இணையவழியில் வழங்குவதற்காக தொலைக் கல்வி முறையைப் பயன்படுத்தல். |
| 07 | திரு. அஜித் விக்ரமசிங்க, சிரேட்ட விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்ப நிலையம் | 1. **கலை மற்றும் மானிடவியல் சம்பந்தமான 8 ஆவது மாநாடு (ICOAH 2021), இணையவழி மாநாடு**<br>• இலங்கையின் இரு பரிமாண அரும்பொருட்கள் பாதுகாப்புக்காக மியுரல் நிர்மாண டிஜிட்டல்மயப்படுத்தல்<br>விக்கிரமசிங்க, ஏ., ஜயசிரி, ஏ. - (2021).<br><br>2. **விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திற்கான இலங்கை சங்கம் (SLAAS 2021), இணையவழி மாநாடு**<br>• இலங்கையின் இரு பரிமாண அரும்பொருட்களுக்காக டிஜிட்டல் ஆவணக் காப்பகத்தை உருவாக்குதல்,<br>விக்கிரமசிங்க, ஏ., ஜயசிரி, ஏ. - (2021).<br><br>3. **மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய 7 ஆவது சர்வதேச மாநாடு (IConArts 2021), கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.**<br>• பாதுகாப்புக்காக இரு பரிமாண அரும்பொருட்கள் டிஜிட்டல் மயப்படுத்தலுக்கான அணுகுமுறை<br>விக்கிரமசிங்க, ஏ., ஜயசிரி, ஏ. - (2021).<br>4. **புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வளர்ச்சியடையும் தொழில்நுட்பம் சம்பந்தமான சர்வதேச மாநாட்டின் அறிக்கை குறிப்புக்கள் (ICIET 2021), இணையவழி மாநாடு, தொழில்நுட்ப பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.** |

| | | |
|---|---|---|
| | | • மியுரல் (சுவரோவிய) வடிவமைப்புக்களில் பனோரமிக் சிற்பங்களின் புள்ளி விவரப் படிவம்<br><br>விக்கிரமசிங்க, ஏ., ஜயசிரி, ஏ. - (2021).<br><br>5. **இணையவழி ஆராய்ச்சி கல்விசார் கருத்தரங்கு, 2021 - பட்டப்பின் படிப்பு கற்கைப் பீடம், கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்**<br>6.<br>• இலங்கையின் இலங்கையின் இரு பரிமாண அரும்பொருட்கள் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள்.<br><br>விக்கிரமசிங்க, ஏ., ஜயசிரி, ஏ. கொடிகார, என். - (2021). |
| 08 | ஏ ஏ சீ ஜே அதிகாரி, உதவிப் பதிவாளர், சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல் | 1. **விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் துறையின் முன்னேற்றம் சம்பந்தமான SLITT சர்வதேச மாநாடு**<br>• மூட நம்பிக்கை அல்லது உண்மை சம்பந்தமாக கட்டாய அதிகாரத்தை பெற்றுக்கொடுத்தல் ; கொவிட் 19 தொற்று நோய் நிலவிய காலப் பகுதியில் இந்தியா மற்றும் இலங்கையின் அனுபவங்களின் அடிப்படையிலான பகுப்பாய்வு<br>2. **வணிக முகாமைத்துவம் பற்றிய 18 ஆவது சர்வதேச மாநாடு - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**<br>• உலகளாவிய தொற்ற நோய் காலப் பகுதியினுள் புலமைச் சொத்துக்கள் தொடர்பான உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தல்: கொவிட் 19 தொற்று நோயுடன் தொடர்புடைய மருத்துவ உபகரணங்கள் தொடர்பான முப்பரிமாண அச்சிடல் அலுவல்கள் அதிகரிப்பதன் தாக்கம்<br>**(கலாநிதி சனத் விஜேசிங்க மற்றும் ஏ ஏ சீ ஜே அதிகாரி ஆகியோர் இணைந்து எழுதியது)** |
| 09 | திரு. டீ பீ ரோஹன பீரிஸ், விரிவுரையாளர் (தகுதிகாண்) நடனம் மற்றும் நாடகக் கலை | 1. அருவமான கலாச்சாரப் பாரம்பரியம் பற்றிய 3 ஆவது சர்வதேச மாநாடு (ICICH) 2021 , ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்<br>2. இலங்கை கலாசாரத்தில் பயன்படுத்தப்படும் "ஆயுபோவன்" மற்றும் அதன் ஒழுக்கநெறிமுறை பற்றிய ஆய்வு.<br>3. பல்துறைக் கற்கை அணுகுமுறை பற்றிய 8 ஆவது சர்வதேச மாநாடு 2021 - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்<br>4. சூழலுடன் இணைந்த மரங்கள் மீதான நம்பிக்கை பற்றிய ஆய்வு |

**24. கணக்காய்வுக்குழுவின் அறிக்கை - 2021**
**கணக்காய்வுக் குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்**

கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள், நிர்வாக சபையினால் நியமிக்கப்படும் மூன்று நிர்வாக சபை அங்கத்தவர்கள் மற்றும் பதிவாளர் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

மீளாய்வாண்டில் கீழ் குறிப்பிடப்படுபவர்கள் கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களாக அலுவல் மேற்கொண்டனர்.

**நிர்வாக சபை அங்கத்தவர்கள் -**

திரு. லக்ஷ்மன் அபேசேக்கர - தலைவர்
பேராசிரியர் குசுமா கருணாரத்ன - அங்கத்தவர்
பேராசிரியர் நிமல் கீர்த்தி தங்கல்ல - அங்கத்தவர்

**பதிவாளர்**

திரு. பீ.எம்.தயாவங்ச - அங்கத்தவர்

திரு. பீ.எம்.ஆர். பதிராஜ, கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வுக் குழுவின் கண்காணிப்பாளராக நடவடிக்கை மேற்கொண்டனர்.

**நிறைவேற்றிய பணிகள்**

1. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

2. தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் கணக்காய்வு ஐய வினாக்கள் மீது கவனம் செலுத்தப்பட்டு எதிர் காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அவதானிப்புக்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் எடுத்துள்ள / எடுக்கப்படவுள்ள உரிய நடவடிக்கைகள் சம்பந்தமான அறிக்கையை கால வரையறையுடன் பரிசீலிக்கப்பட்டதுடன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக தேவையான பரிந்துரைகளுடன் நிர்வாக சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## 25. பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால இலக்கு பற்றிய அறிக்கை..

பேண்தகு அபிவிருத்தி சம்பந்தமான கோட்பாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரலில் 17 இலக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021 - 2023 மூலோபாயத் திட்டத்தின் இலக்குகள் நேரடி மற்றும் மறைமுகமாக பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் இயைந்தள்ளன.

பல்கலைக்கழகத்தினால் 2021 - 2023 மூலோபாயத் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **04 ஆவது பேண்தகு அபிவிருத்தி இலக்கான "தரமான கல்வி"** இற்கு நேரடியான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

- இலக்கு இல. 1 - பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு
- இலக்கு இல. 3 - புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் படைப்பாற்றல் நடவடிக்கைகள்
- இலக்கு இல. 4 - தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான பங்களிப்பு
- இலக்கு இல. 5 - நிதிசார் நிலையான தன்மை
- இலக்கு இல. 6 - சர்வதேச கண்ணோட்டம்

இலக்கு இலக்கம் 1, 3, 4, 5 மற்றும் 6 என்பவற்றை அடைந்துகொள்வதனூடாக கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு 04 ஆம் இலக்க பேண்தகு இலக்கை அடைந்துகொள்ள முடியுமாக இருக்கும்.

அத்தோடு பல்கலைக்கழகத்தில் பாலின சமத்துவம் மற்றும் நியாயத்திற்கான நிலையத்தை பலப்படுத்துவதனூடாக **04 ஆவது பேண்தகு அபிவிருத்தி இலக்கான "தரமான கல்வி"** மற்றும் **05 ஆவது இலக்கான "பாலின சமத்துவம்"** என்பவற்றை அடைந்துகொள்வதற்காக ஆண் மற்றும் பெண் இரு சாராரையும் பல்கலைக் கல்விக்கு சம வாய்ப்பை உறுதிப்படுத்திப ல்கலைக்கழகக் கல்வியின் சமத்துவத்தையும் தரத்தையும் பேணி வர முடியுமாக இருக்கும்.

தரமான கல்வி ஊடாக பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்பதனூடாக **வறுமை சம்பந்தமான பேண்தகு அபிவிருத்தி இலக்கு - 01** இனை அடைந்து கொள்வதனூடாக வறுமையை குறைப்பதற்காக பல்கலைக்கழகத்திற்கு மறைமுகமான பங்களிப்பை வழங்க முடியுமாக இருக்கும்.

ஆராய்ச்சி வெளியீடுகளை வெளியிடுதல் சம்பந்தமான இலக்கு இலக்கம் : 02, தேசிய மற்றும் சர்வதேச பங்களிப்பு சம்பந்தமான இலக்கு இலக்கம் : 04 மற்றும் சர்வதேச எதிர்கால நோக்கு சம்பந்தமான இலக்கு இலக்கம் :06 என்பவற்றை அடைந்துகொள்வதனூடாக **சமாதானம், நியாயம் மற்றும் முழுமையான நிறுவனங்கள் சம்பந்தமான பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 16 மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு பற்றிய பேண்தகு அபிவிருத்தி இலக்கு இல. 17** என்பவற்றை அடைந்துகொள்வதற்காக பல்கலைக்கழக மூலோபாயத் திட்டம் மறைமுகமாக பங்களிப்பு வழங்கப்படும்.

சர்வதேச பங்களிப்பு மற்றும் நிலையான நிதி நிலைமை சம்பந்தமான 04 ஆவது மற்றும் 05 ஆவது இலக்குகள் முறையே கௌரவமான தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி சம்பந்தமான **8 ஆவது பேண்தகு இலக்கை** அடைந்துகொள்வதற்கு மறைமுகமான பங்களிப்பை வழங்குகின்றது.

அதற்கமைய பல்கலைக்கழகத்தின் 2021 - 2023 மூலோபாயத் திட்டத்தின் அனைத்து இலக்குகள் மேலே குறிப்பிடப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் பொருந்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்

## 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

1. பொது

1.1 அறிக்கைப்படுத்தப்படும் நிறுவனம்

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும். தலைமை நிர்வாக அலுவலகம் மற்றும் பிரதான அலுவல்கள் கொழும்பு 07, இலக்கம் 21, அல்பர்ட் கிரசன்ட் எனும் முகவரியில் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 பிரதான அலுவல்கள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு மட்டங்களில் அழகியற்கலை கற்கை துறையின் கோட்பாட்டு மற்றும் செய்முறை ஆகிய பிரிவுகளின் கீழ் உயர் கல்வியைப் பெற்றுக்கொடுத்தல், அந்தத் துறையின் அறிவு மற்றும் ஆற்றல்களை ஏனையோருக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அந்தத் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பன இந்தப் பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாடுகளாகும். பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் பாடநெறிகளை சிறப்பான வகையில் நிறைவு செய்யும் மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதும் இந்தப் பல்கலைக்கழகத்தின் பிரதான அலுவலாகும்.

1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட திகதி

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2022 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி நிர்வாக சபையின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1.4 அறிக்கைப்படுத்தும் காலப் பகுதி

பல்கலைக்கழகத்தின் நிதிசார் கால எல்லை 2021 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியாகும்.

2. பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 இணக்கப்பாடு சம்பந்தமான கூற்று

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றல் பற்றிய கூற்று மற்றும் குறிப்புக்களைக் கொண்டதாகும்.

## 2.2 கணக்கீட்டின் அடிப்படை

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியிலான கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கணக்கிடுதல் தவிர நிதிக் கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகள் சீர்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

## 2.3 தகவல்களை ஒப்பீடு செய்தல்

நடப்பு ஆண்டின் பெறுமதியை முன்வைக்கும்போது பல்கலைக்கழகத்தினால் பின்பற்றப்பட்ட அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகளும் முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இயைந்துள்ளன. தேவையான சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டுப் பெறுமதிகள் நடப்பு ஆண்டின் மாற்றங்களுடன் சீர்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளது.

## 2.4 பொருட்கள் மற்றும் திரள்வு

அனைத்து அளவு சார்ந்த சமமான உருப்படிகள் (பொருட்கள்) நிதிக் கூற்றுக்களில் தனித் தனியாக முன்வைக்கப்பட்டுள்ளது. அளவு சார்ந்தல்லதாயின் பொருந்தாத தன்மை அல்லது செயற்படு நிலையிலுள்ள உருப்படிகள் தனித் தனியாக முன்வைக்கப்பட்டுள்ளது.

## 2.5 ஈடு செய்தல்

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) ஊடாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் ஈடு செய்யப்பட்டு பதிவழிப்புச் செய்யப்படவில்லை.

## 2.6 தொடர்ந்தேர்ச்சியான இருப்பு

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு தொடர்ந்தேர்ச்சியான இருப்பொன்று உள்ளதாக கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபைக்கு எதிர்பார்க்க முடியுமான எதிர்காலத்திற்குப் போதுமானளவில் வளங்கள் இருக்கின்றதென்ற நியாயமான எதிர்பார்ப்பொன்று உண்டு. எதிர்காலம் சம்பந்தமான அனைத்துத் தகவல்களையும் கவனத்திற்கொண்டு பல்கலைக்கழகத்தை கலைத்து விடுதல், செயற்பாடுகளை நிறுத்தி விடுதலை முன்னறிக்கவில்லை. நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான இருப்பு எனும் அடிப்படை பின்பற்றப்பட்டுள்ளது.

## 2.7 அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கைப்படுத்தும் திகதியின் பின்னரான அனைத்து நிகழ்வுகள் சம்பந்தமாகவும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களில் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சீர்படுத்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.8 பயன்பாட்டு நாணயம் மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்**

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகளின் பெறுமதி பல்கலைக்கழகத்தின் பொருளாதார சூழலில் பயன்படுத்தப்படும் நாணய அலகுகளிலேயே அளவிடப்படுகின்றது (பயன்பாட்டு நாணயம்). இந்த நிதிக் கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு நாணயம் மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணய அலகான 'இலங்கை ரூபாவில்' (ரூ.) தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.9 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீதிகள்**

வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் அந்தத் தினங்களில் நிலவும் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்தலின் பெறுபேறாக வெளிநாட்டுச் செலாவணி இலாபம், நட்டம் மற்றும் வெளிநாட்டு நாணயத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஆண்டிறுதியில் வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின் மாற்றல் நிதி செயலாற்றுகை கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

**2.10 கிட்டிய பெறுமதி**

இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்கள் ஊடாக அனுமதிக்கப்பட்டுள்ள பிரகாரம் வேறு வகையில் குறிப்பிடாதிருப்பின் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொகைகள் கிட்டிய ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.11 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (PPE)**

**2.11.1** சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள், கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் திரண்ட தேய்வு மற்றும் திரண்ட சேதங்களுக்கான நட்டம் குறைக்கப்பட்ட பெறுமதிக்கு காண்பிக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்படும் சதவீதங்களின் கீழ் இலகு வழியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 1995.10.05 ஆம் திகதிய 649 ஆம் இலக்க சுற்றறிக்கமைய தேய்மானங்கள் அறவிடப்படும்.

| சொத்து வகைகள் | தேய்மான வீதம் |
|---|---|
| கட்டிடங்கள் | 5% |
| மரத் தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 10% |
| பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| நூலக புத்தகங்கள் மற்றும் பருவ கால சஞ்சிகைகள் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| விளையாட்டு உபகரணங்கள் உள்ளடங்கலாக ஆய்கூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள் | 20% |

### 2.11.2 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்தல்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில உருப்படிகள் 2010.06.30 ஆம் திகதியன்று மீள் மதிப்பீட்டு பெறுமதியின் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**காணிகள் மற்றும் கட்டிடங்கள்**

அனைத்துக் காணிகளும் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. 2010.06.30 ஆம் திகதியன்று 10 வருடங்களிலும் அதிகமான பழைமை வாய்ந்த கட்டிடங்கள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மதிப்பீட்டாளர்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவரால் இந்த மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி அமைச்சிடமிருந்து இரண்டு கட்டிடங்கள் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றன. அந்தப் பெறுமதியும் 2017 நவம்பர் 01 ஆம் திகதி முதல் பெறுமதி தேய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**நூல்கள் மற்றும் பருவ கால சஞ்சிகைகள்**

2005.12.31 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையிலேயே மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| நூல்கள் கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதி | மீள் மதிப்பீட்டு அடிப்படை |
|---|---|
| 1999.01.01 – 2005.12.31 | செலவின் 80% |
| 1990.01.01 – 1998.12.31 | செலவின் 70% |
| 1989.12.31 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் | செலவின் 60% |

தகைமை பெற்ற சுயாதீன ஆலோசகரொருவர் மற்றும் பட்டயக் கணக்காளர் ஒருவர் இணைந்து இந்த அலுவலை மேற்கொண்டுள்ளனர்.

**மரத் தளபாடங்கள், பொருத்துகைகள் மற்றும் பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்**

கிரயத்தை இனங்கண்டுகொள்ள முடியுமான கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

| கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதி | மீள் மதிப்பீட்டு அடிப்படை |
|---|---|
| 1991.01.01– 2000.12.31 | செலவின் 80 % |
| 1990.12.31 திகதிக்கு முன்னர் | செலவின் 60 % |

**அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள்**

| கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதி | மீள் மதிப்பீட்டு அடிப்படை |
|---|---|
| 1996.01.01–2005.12.31 | செலவின் 75 % |
| 2005.12.31 திகதிக்கு முன்னர் | செலவின் 50 % |

கிரயத்தை இனங்கண்டுகொள்ள முடியாத தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள், பொறித் தொகுதி மற்றும் இயந்திர சாதனங்கள், அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள் மதிப்பீடு செய்ப்பட்ட நிகர கைத்தேறிய பெறுமதிக்கமைய நியாயமான பெறுமதியின் (ENRV) அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அலுவலை பட்டயக் கணக்காளர் ஒருவர் மற்றும் தகைமை பெற்ற சுயாதீன ஆலோசகர் ஒருவர் மற்றும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

**மோட்டார் வாகனங்கள்**

அனைத்து மோட்டார் வகனங்களினதும் 2018.01.01 ஆம் திகதியன்று மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 27,400,000.00 எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நியாயமான சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒட்டோ மொபைல் சங்கத்தினால் (Auto Mobile Association) மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. Auto Mobile Association of Ceylon நிறுவனத்தினால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

WP KJ – 3863 ஆம் இலக்க டொயோட்டா லேன்ட் குரூசர் ப்ராடோ (2010) ஜீப் வண்டி நிதி, பொருளாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பேரவையினால் இதன் உரிமையை கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒட்டோ மொபைல் அசோஷியேசன் ஒப் சிலோன் (இலங்கை ஆட்டோ மொபைல் சங்கம்) மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த வாகனத்தின் பழுதுபார்ப்புச் செலவுகள் உட்பட அதன் பெறுமதி ரூபா 11,580,089.37 பெறுமதி குறிப்பிடப்பட்டு ஜீப் வண்டி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.11.3 முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்கள் (பூச்சிய மதிப்புச் சொத்துக்கள்)**

சொத்தொன்றின் மீதமுள்ள பெறுமதி மற்றும் பயன்மிக்க ஆயுட் காலத்தை குறைந்தது அனைத்து வருடாந்த அறிக்கையிடல் திகதியன்றும் மீளாய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளதுடன், எதிர்பார்ப்புக்கள் முன்னைய மதிப்பீடுகளைப் பார்க்கிலும் மாற்றமடைந்திருப்பின், இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 3 இற்கமைய (SLPSAS - 3) கணக்கீட்டு மதிப்பீட்டின்

வேறுபாடொன்றாக மாற்றங்கள் கணக்கிடப்படும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் (SLPSAS - 7) 65 ஆவது பந்திக்கமைய "கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகளின் வேறுபாடுகள்" மானியங்கள் ஆணைக்குழுவின் 2011/03 மற்றும் 2014/03 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் பல்கலைக்கழக முறைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விபரமான கணக்காய்வறிக்கையின் "1.4.2 - கணக்கீட்டு நியமம்" இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இந்த நியமத்திற்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலம் சம்பந்தமாக கணக்குகள் மதிப்பீட்டை மாற்றியமைத்தமையின் காரணமாக மதிப்பீட்டு ரீதியிலான பிழைகள் ஏற்பட்டுள்ளது. இது தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் ஆண்டுதோறும் முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்யாததன் பெறுபேறாகும்.

அதன்படி, பூச்சிய மதிப்பு உட்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன், அது 2021.12.31 ஆம் திகதியாகும்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் முழுமையாக தேய்மானத்திற்குட்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பொழிப்புக்குக் கீழ் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் (SLPSAS - 7) 91 ஆவது பந்திக்கமைய 2021.12.31 ஆம் திகதியாகும்போது ரூபா **513,808,196.10** தொகை வெளிப்படுத்தப்படுகின்றது. பூச்சியப் பெறுமதி சொத்துக்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வகை இல. | சொத்து வகைகள் | உண்மையான செலவு ரூபா |
|---|---|---|
| 3 | அலுவலக உபகரணங்கள் | 132,128,288.75 |
| 4 | பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 1,914,107.90 |
| 5 | ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 267,757,910.67 |
| 6 | தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 49,237,612.10 |
| 7 | நூலகப் புத்தகங்கள் | 46,483,730.28 |
| 9 | விளையாட்டு உபகரணங்கள் | 1,191,767.00 |
| 14 | பட்டதாரி அங்கி மற்றும் நடன ஆபரணங்கள் | 15,094,779.40 |
| | **மொத்தம்** | **513,808,196.10** |

**2.11.4** 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பூச்சியப் பெறுமதி சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தேய்மானப் பெறுமதி ரூபா 16,157,917.84 ஆக இருந்ததென்பதுடன், அது 2018 ஆம் ஆண்டில் கணக்குப் பதிவேடுகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| **சொத்து வகைகள்** | **தேய்மானம் ரூபா** |
|---|---|
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 10,760,353.72 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 805,316.93 |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 874,428.14 |
| பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 21,995.45 |
| கட்டிடங்கள் | 194,260.66 |
| பட்டதாரி அங்கிகள் மற்றும் நடன ஆபரணங்கள் | 1,205,076.96 |
| அலுவலக உபகரணங்கள் | 2,296,486.10 |
| | **16,157,917.84** |

நிலையான சொத்துக்கள் பதிவேடு இரண்டு கணனிமயப்படுத்தப்பட்ட பொதிகளில் (computerized packages) பேணி வரப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் தொடர்பான தரவுகள் 2015 ஆம் ஆண்டு வரை ஒரு தொகுப்பில் (பழைய பொதி) குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு முதல் தரவுகள் புதிய தொகுப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய தொகுப்பிலுள்ள அனைத்துத் தரவுகளும் 2018 இல் புதிய தொகுப்பொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், ஆரம்ப கொள்வனவுத் திகதியிலிருந்து அது செயற்படுத்தப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட தேய்மானங்கள் மீதும் இது பாதிப்புச் செலுத்துகின்றது.

**2.11.5** செலவினப் பெறுமதியானது அலுவலக உபகரணங்கள் முதல் விளையாட்டு உபகரணங்கள் வரை மாற்றப்பட்ட விளையாட்டு உபகரணங்களின் ரூ. 714,167/= மற்றும் 2020 ஆம் ஆண்டில் அலுவலக உபகரணங்களின் ஒட்டுமொத்தத் தேய்மானத்திலிருந்து விளையாட்டு உபகரணங்களின் ஒட்டுமொத்தத் தேய்மானம் வரை மாற்றப்படுகின்றது.

**2.11.6** **<u>கொஹுவளை வளவு</u>**

கொழும்பு 07 இல் அமைந்துள்ள கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தில் இட வசதிகள் போதாமையின் காரணமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கொஹுவளையில் அமைந்துள்ள வளவொன்று தற்காலிகமாக கற்கை நடவடிக்கைகளுக்காகப்

பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றது. எனவே இந்தப் பல்கலைக்கழகத்தின் கணக்குப் பதிவேடுகளில் பெறுமதி கவனத்திற்கொள்ளப்படவில்லை.

## 2.12 மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள்

அறிக்கைப்படுத்தப்படும் திகதியன்று நிறைவு செய்யப்படாத சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான (PPE) மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுவரும் மூலதனப் பணிகள் எனக் குறிப்பிடப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை பயன்படுத்தும்போது சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்படும். நடனம் மற்றும் நாடக பீடத்திற்காக தெஹிவளையில் புதிய கட்டிடமொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.13 அருவச் (புலப்படாத) சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்க முடியுமான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் தொழில் முயற்சிக்குள் வர முடியுமாக இருப்பதுடன், சொத்துக்களின் கிரயத்தை உரிய முறையில் அளவிட முடியுமாக இருக்கும்போது கணனி மென்பொருள்கள் (சொப்ட்வெயார்ஸ்) அருவச் சொத்துக்களாக இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளது. கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து குறைந்த திரட்டிய பெறுமதி தேய்வு மற்றும் திரட்டிய சேதம் நட்டமாக இனங்கண்டுகொள்ளப்படும். இந்தக் கிரயம் அவர்களது மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட் காலத்தின் அடிப்படையில் தேய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

## 2.14 நிதிச் சொத்துக்கள்

### முதலீடுகள்

முதலீடுகள் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவதனைக் குறிக்கின்றது. இந்த முதலீடுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 09 (SLFRS 09) இற்கமைய கணக்கில் பதியப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுதலானது SLFRS 09 இற்கமைய பெறுமதி தேய்மானதக் கிரயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை முதலில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதுடன் பின்னர் SLFRS 09 இற்கமைய பயனுள்ள வட்டி வீதத்தினைப் (effective interest rate) பயன்படுத்தி நியாயமான பெறுமதியிலும் குறைந்த பெறுமதி தேய்வின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது.

## 2.15 நடைமுறைச் சொத்துக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வகையீடு செய்யப்பட்டுள்ள நடைமுறைச் சொத்து என்பது பல்கலைக்கழகத்தின் பொதுவான செயற்பாட்டு சுற்றினுள்

அடைந்துகொள்வதற்கு அல்லது பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்ப்பவைகளாக இருப்பதுடன், அறிக்கைப்படுத்தும் தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் கைத்தேறிய காசு அல்லது காசுக்குச் சமமானவைகளாகும்.

## 2.16 இருப்புக்கள்

இருப்புக்கள் கிரயத்திற்கமைய குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முதலில் வந்தது முதலில் செல்லல் (FIFO) அடிப்படையில் தீர்மானிக்கப்படும். இருப்பானது பிரதானமாக எழுது பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களை உள்ளடக்கியதாக இருக்கும். பொருட்கள் இருப்பு பயன்படுத்துவதற்காகவன்றி மீள விற்பனை செய்வதற்கில்லை.

இருப்புப் பொருட்களில் மெதுவாக அசையும் உருப்படிகளின் (உ-ம்: புத்தகங்கள்) பெறுமதி ரூ. 1,180,352.03 மற்றும் அசையாத உருப்படிகளின் பெறுமதி ரூ. 289,277.54 உள்ளடக்கப்பட்டுள்ளது. ரூ. 191,839.54 பெறுமதிமிக்க உருப்படிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டு 2022 இல் நீக்கப்படும்.

பராமரிப்புப் பிரிவின் இருப்புப் பொருட்கள் வெவ்வேறாக கணக்கிடப்படும்.

புத்தகங்கள் இருப்புப் பொருட்களுக்குள் உள்ளடங்குகின்றன. (20 புத்தகங்கள் 'சிங்கள வண்ணம் கலாவ' இலிருந்து பெறப்படல் வேண்டும்.)

பிரதான வியாபார நிலையங்களிலினால் வெளியிடப்படும் புத்தகங்களை பல்கலைக்கழக அச்சகத்திலிருந்து (VAPA) பெற்றுக்கொள்ள முடியும் அல்லது வினியேகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள தொகை ரூ. 555,101.53ஆகும்.

## 2.17 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்

பண்டிகைக் கால முற்பணம் மற்றும் நூல்களுக்கான படிகள் என்பனவாகும்.

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்றால் கையிருப்புக் காசு மற்றும் குறுகிய கால திரவநிலை முதலீடுகள் அதாவது இலகுவாக காசாக மாற்றிக்கொள்ள முடியுமானவைகளாக இருப்பதுடன் சிறியளவிலான ஆபத்துக்குட்படக்கூடியவைகள் என வரைவிலக்கணப்படுத்தலாம். காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பதற்கு கையிருப்புப் பணமும் வங்கியிலுள்ள வைப்பும் உள்ளடங்கும். கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாத காலம் அல்லது அதனிலும் குறைவான குறுகிய கால முதிர்ச்சியுடனான முதலீட்டுப் பணமும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கருதப்படும். காசுப் பாய்ச்சல் கூற்று மறைமுக முறையின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது.

## 2.19 ஊழியர் அனுகூலங்கள் - வரையறை செய்யப்பட்டுள்ள அனுகூலத் திட்டமிடல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 இன் பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தை நிறைவு செய்யும் அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கப்படும். இந்த நிதி ஒதுக்கீட்டிற்கு வெளிவாரியாக நிதியளிப்பு மேற்கொள்ளப்பட மாட்டாது. 2019.06.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்ட 05/2019 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் பாரியளவில் அதிகரித்துள்ளது. அதற்கமைய பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் ஆளணிக்காக செலுத்தப்படும் கல்விசார் படி மற்றும் கல்விசாரா ஆளணிக்காக செலுத்தப்படும் மாதாந்த இழப்பீட்டுப் படியை (MCA) பணிக்கொடை செலுத்துவதற்காக கணக்கிடுவதற்காக கவனத்திற்கொள்ளப்பட்டது.

## 2.20 பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடு

### நடைமுறைப் பொறுப்புக்கள்

நடைமுறைப் பொறுப்புக்களை அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிதி ஏற்பாடு

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக பல்கலைக்கழகத்திற்குரிய கடப்பாடுகள் (சட்ட ரீதியிலான மற்றும் ஆக்கபூர்வமான) காணப்படும்போது நிதி ஏற்பாடு இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பொருளாதார ரீதியிலான அனுகூலங்களைக் கொண்ட வளங்கள் வெளிச் செல்லல் வேண்டுமென்பதுடன் நம்பகமான மதிப்பீடொன்றை தயாரிக்க முடியும்.

### நிச்சயமற்ற (எதிர்பாராத) பொறுப்புக்கள் மற்றும் நிச்சயமற்ற சொத்துக்கள்

நிச்சயமற்ற பொறுப்பு என்றால், செயற்பாட்டுக் கட்டுப்பாட்டை விஞ்சிச் சென்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் அல்லது தொடர்ச்சியாக நிலவுதல் அல்லது அது ஏற்பட முடியாதென்பதனால் இனங்கண்டுகொள்ளப்படாத நிகழ்கால பொறுப்பொன்றான கடந்த கால நிகழ்வுகளினூடாக எழும் பொறுப்பாகும். பொறுப்பை தீர்ப்பதற்காக வளங்கள் உள்வரல் அவசியமாகும்.

நம்பிக்கையுடன் அளவிட முடியாத பொறுப்பொன்றையுடைய மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலும் தொடர்ச்சியான பொறுப்பொன்றாக இனங்கண்டு கொள்ளப்படாதிருப்பதுடன் நிதிக் கூற்றில் அதன் இருப்பு வெளிப்படுத்தப்படும்.

நிச்சயமற்ற பொறுப்பு என்றால், பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டை விஞ்சிச் சென்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வொன்று அல்லது அதிக எண்ணிக்கையிலான நிகழ்வுகள் அல்லது நிகழ்வுகளினூடாக எழக்கூடிய சொத்தாகும்.

பல்கலைக்கழகத்தின் நிச்சயமற்ற சொத்துக்கள் இனங்கண்டுகொள்ளப்படாதிருப்பதுடன், பொருளாதார அனுகூலங்கள் உள்வருவதற்கு வாய்ப்பிருப்பினும் நிச்சயமற்ற அதன் இருப்பை வெளிப்படுத்துகின்றது.

## 2.21 வருமானங்களை இனங்காணல்

அரசாங்கத்தின் மீண்டெழும் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது. மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்படும்போதே வருமானமாக கணக்கீடு செய்யப்படுகின்றது. முதலீட்டின் அடிப்படையிலான வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுய நிதி அடிப்படையில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பாடநெறிக் கட்டணங்கள் உரிய பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பாடநெறியின் காலத்தை அடிப்படையாகக்கொண்டு நீக்கப்படும்.

**நிதிசார் வருமானம்**

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) இல்லாமையின் காரணமாக இலங்கை நிதி அறிக்கைப்படுத்தல் நியமம் 09 (SLFRS 09) இற்கமைய பயன்மிக்க வட்டி வீத முறையொன்றைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானம் இனங்கண்டு கொள்ளப்படும்.

## 2.22 செலவுகளை இனங்காணல்

நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகள் அந்த செலவுகளின் தன்மையை அடிப்படையாகக்கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆண்டின் மேலதிகத்தை கணக்கிடும்போது இளமாணிப் பட்டத் தேர்வுநாடிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவுகளும் அரசாங்கத்தின் மீண்டெழும் உதவிகளிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

## 2.23 திறந்த மற்றும் தொலைக் கல்விப் பிரிவு (CODL)

முழுமையான சுய நிதி அடிப்படையில் “திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் (CODL)” என தனியான பிரிவொன்று பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவுக்காக முதலில் தனியான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அவை பல்கலைக்கழகத்தின் மொத்த நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

932 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய CODL இன் நிதியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு CODL இனால் துணைச் சட்டமொன்று

தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக நிதியத்தின் செலவுகள் நிதியத்தின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும். ஆண்டினுள் நிதியத்தின் செலவு ரூ. 488,338.00 ஆகும்.

முக்கியமாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் செயன்முறை சார்ந்த செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொற்று நோய் நிலைமை காரணமாக கல்வி நடவடிக்கைகளை (பரீட்சைகள் மற்றும் கற்பித்தல்) மேற்கொள்ள முடியவில்லை. மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருவதற்குகந்த நிலைமை ஏற்பட்டதன் பின்னர் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். அதனால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை கழித்ததன் பின்னர் அனைத்து வருமானங்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**2.24** <u>பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு</u>

சுய நிதி அடிப்படையில் பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவு என தனியான பிரிவொன்று பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்றது. இந்தப் பிரிவுக்காக முதலில் தனியான நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு பின்னர் அது பல்கலைக்கழகத்தின் மொத்த நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**2.25** <u>மூலதன / அபிவிருத்தி உதவியின் கீழ் பெறப்பட்ட விசேட உதவிகளை கணக்கு வைத்தல்</u>

திறைசேரியிடமிருந்து விசேட செயற் திட்டங்களுக்காக கிடைக்கும் மூலதன நிதி ஏற்பாடுகள் முதலில் செலவிடப்படாத மூலதன உதவியின் கீழ் கணக்கு வைக்கப்படும். இந்த நிதியிலிருந்து மீண்டெழும் தன்மையைக்கொண்ட அலுவல்களுக்கு செலவு செய்யும்போது அந்தத் தொகை நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் மீண்டெழும் கிடைப்பனவு மற்றும் செலவாகக் குறிப்பிடப்படுகின்றது.

**2.26** <u>"நிலையான சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு" இன் கீழ் கிடைக்கப்பெற்ற மூலதன உதவிகளைக் கணக்கு வைத்தல்</u>

மூலதனச் செலவாகக் கருத முடியுமான செலவுகள் மாத்திரம் மூலதனப்படுத்தப்படுவதுடன் ஏனைய செலவுகள் நடப்பு ஆண்டின் நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் செலவாகக் குறிப்பிடப்பட்டு பதிவழிப்புச் செய்யப்படும்.

**2.27** <u>தொடர்புடைய தரப்பினர் சம்பந்தமாக வெளிப்படுத்தல்</u>

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் கொள்கை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு இணையத்தள வசதிகள் LEARN நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான சிரேட்ட விரிவுரையாளரான திருமதி I.A.C.K

சமரசிங்க LEARN நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக அலுவல் மேற்கொண்டு வருகின்றார். அந்த விரிவுரையாளரால் ஆற்றப்படும் சேவைக்காக பல்கலைக்கழகத்தினால் அல்லது LEARN நிறுவனத்தினால் எந்தவிதமான ஊதியமும் செலுத்தப்படுவதில்லை.

**2.29 காசுப் பாய்ச்சல் கூற்று**

SLPSAS 2 இற்கமைய மறைமுக முறையை அடிப்படையாகக்கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதிசார் செயற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளில் இனங்கண்டுகொள்ளப்படும். காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் என்பது குறுகிய கால உயர் திரவத் தன்மையைக் கொண்ட முதலீட்டை உள்ளடக்கியதாகும். அவற்றை இலகுவில் காசாக மாற்றிக்கொள்ள முடியுமென்பதுடன் பெறுமதி மாற்றம் எனும் சிறிய ஆபத்துக்குட்பட்டதாகும்.

**2.30 பல்கலைக்கழகத்தின் வசமிருந்த மற்றும் கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட காணிகள் சம்பந்தமான விபரம்**

| காணியின் பெயர் | தற்போதைய நிலைமை |
|---|---|
| இலக்கம் 21, அல்பிரட் கிரசன்ட் | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய, 4/10/41274 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. |
| இலக்கம் 21/1 அல்பிரட் கிரசன்ட் | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் 2013 நவம்பர் 19 ஆம் திகதிய, 4/3/9908 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. |
| இலக்கம் 46, ஹோர்ட்டன் பிளேஸ் | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இலக்கம் 146, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இலக்கம் 137, வளவ்வத்தை, ராஜகிரிய | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 2.31 பிணை முறி மீறல்கள் பற்றிய விபரம்

**பெயர்** : திரு.எஸ்.எம்.கோட்டெகொட

**அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகை** : ரூ. 3,470,737.17

**சேமலாப நிதியத்தின் மீதி** : ரூ. 921,487.22

**தற்போதைய நிலைமை** : குறித்த தொகையை மீளச் செலுத்துமாறு 2020.09.29 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சேமலாப நிதியத் (UPF) தொகையை மீளச் செலுத்துவதற்கான விண்ணப்பமோ அல்லது இணங்கிய பிரகாரம் தவணைத் தொகை செலுத்தப்படவில்லை.

**பெயர் :** திருமதி பீ.கே.டப்ளியு.எம்.விஜேகுணசேக்கர

**அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகை :** ரூ. 1,271,568.00

**சேமலாப நிதியத்தின் மீதி :** ரூ. 148,438.31

**தற்போதைய நிலைமை :** கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR/1853/2019 எனும் இலக்கத்தின் கீழ் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், பிரதான கடனாளியினால் தீர்வு முன்மொழியப்பட்டு 2020.12.17 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் 178 ஆவது கூட்டத்தின்போது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**பெயர்** : திருமதி கே.ஏ.கே.பீ.எஸ். பண்டார - தொலைபேசி இயக்குனர் மற்றும் வரவேற்பாளர்

**அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகை** : ரூ. 764,394.10

**தற்போதைய நிலைமை** : திருமதி கே.ஏ.கே.பீ.எஸ். பண்டார அவர்கள் பதவி வெறிதாக்கப்பட்டுள்ளவராக கருதப்பட்டுள்ளதுடன் பிணை விதிகளை மீறியுள்ளார். அவருடைய சேமலாப நிதிய மீதித் தொகையிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

## 2.32 ஏனையவை

### 2.32.01

**பெயர்** :திரு.டப்ளியு.கே..ஜே.பெரேரா - அலுவலக உதவியாளர் - கல்விசாரா தாபனப் பிரிவு

**அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகை :** ரூ.173,121.00

திரு.டப்ளியு.கே..ஜே.பெரேரா போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மேலதிக நேர வேலைப் படியைப் பெற்றுக்கொண்டமையினால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய சேமலாப நிதிய மீதித் தொகையிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

## 2.32.02

நிருவாக சபையின் 180 ஆவது கூட்டத்தின்போது சபை அங்கீகாரத்துடன் கல்வி மற்றும் ஆக்கத்திறன் நடவடிக்கைகள் சம்பந்தமான புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக "VAPA பல்கலைக்கழக அச்சகம்" எனும் பெயரில் தனியான பிரிவொன்று தாபிக்கப்பட்டது.

VAPA பல்கலைக்கழக அச்சகத்தினூடாக சில புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன், அந்தப் புத்தகங்கள் பல்கலைக்கழக விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கொடுக்கல்வாங்கல்கள் "VAPA பல்கலைக்கழக அச்சகம்" கணக்கில் பதியப்பட்டுள்ளதுடன், அச்சிடப்பட்ட புத்தகங்களின் மீதி இருப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் VAPA பல்கலைக்கழக அச்சகத்தின் கொடுக்கல்வாங்கல்களை தனியான கணக்குகளில் பதிவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்ப முதலீடான ரூ. 2,000,000.00 அச்சகத்திலிருந்து பெறப்பட வேண்டியுள்ளது.

## 2.32.03

2022 ஆம் ஆண்டில் VAPA தொலைக்காட்சி நேரலையை (VAPA TV channel) ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
## 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான
## நிதி செயலாற்றுகை அறிக்கைக் கூற்றுக்கள்

| | குறிப்பு | ரூபா 2021 | ரூபா 2020 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| அரசாங்கத்தின் மீண்டெழும் உதவி | | 1,113,000,000 | 1,063,000,000 |
| அரசாங்கத்தின் மூலதன உதவி | | 4,610,584 | 10,851,803 |
| உள்ளக வருமானம் | | 12,303,250 | 9,375,358 |
| பெறுமானத் தேய்வுக்கான அரசாங்க உதவி | | 187,311,108 | 200,151,316 |
| அளிப்புக்கள் - மாணவர் உதவு தொகை | | 26,204,000 | 10,215,700 |
| | | **1,343,428,942** | **1,293,594,177** |
| பட்டப்பின் படிப்பு பீடத்தின் வருமானம் | | 1,532,019 | 2,390,047 |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி மையத்தின் வருமானம் | | 4,171,818 | 9,385,993 |
| **மொத்த வருமானம்** | | **1,349,132,779** | **1,305,370,218** |
| **செலவுகள்** | | | |
| ஆளுக்கான வேதனாதிகள் | 4.01 | 893,364,644 | 876,936,705 |
| பிரயாணச் செலவு | 4.02 | 241,127 | 281,226 |
| வழங்கல்கள் | 5 | 13,814,046 | 13,635,989 |
| பராமரிப்பு செலவு | 6 | 16,452,053 | 9,648,571 |
| ஒப்பந்த சேவைகள் | 7 | 133,380,734 | 108,035,977 |
| ஏனைய மீண்டெழும் செலவினங்கள் | 8.01 | 28,061,286 | 25,835,835 |
| மாணவர் உதவு தொகை | 8.03 | 26,204,000 | 10,215,700 |
| அரசாங்க உதவி - மீண்டெழும் செலவினம் | | 4,667,084 | 10,851,803 |
| பயன்படுத்த முடியாத நிலையான சொத்துக்களை அகற்றுவதற்கான செலவு | | - | 211,886 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | | (62,698,941) | 108,211,505 |
| தேய்வு மற்றும் பெறுமானத் தேய்வு | | 187,311,108 | 200,151,316 |
| | | **1,240,797,141** | **1,364,016,512** |
| பட்டப்பின் படிப்பு பாடநெறி பீடத்திற்கான செலவுகள் | | 1,082,373 | 2,202,925 |
| திறந்த மற்றும் தொலைக் கல்வி கற்கைப் மையத்தின் செலவுகள் | | 1,665,769 | 3,174,280 |
| **மொத்தச் செலவினம்** | | **1,243,545,284** | **1,369,393,717** |
| **ஆண்டின் மேலதிகம் /(குறைவு) பல்கலைக்கழகம்** | | 103,049,662 | (70,422,335) |
| **ஆண்டின் மேலதிகம் /(குறைவு) பட்டப்பின் படிப்பு பிரிவு** | | 449,646 | 107,955 |
| **ஆண்டின் மேலதிகம் /(குறைவு) திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம்** | | 2,506,049 | 5,589,326 |
| **ஆண்டின் மொத்த மேலதிகம் /(குறைவு)** | | **106,005,357** | **(64,725,054)** |

## கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
## 2021.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை பற்றிய அறிக்கை

| | குறிப்பு | ரூபா 2021 | ரூபா 2020 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 12 | 55,353,929 | 17,592,262 |
| கிடைக்க வேண்டிய தொகை | 13 | 19,235,057 | 17,895,465 |
| குறுகிய கால முதலீடுகள் (திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம்) | | 39,905,996 | 36,965,361 |
| இருப்புக்கள் | 14 | 9,284,788 | 6,283,635 |
| முன் செலுத்துகைகள் | 15 | 641,129 | 1,007,249 |
| முற்பணம் | 16 | 10,320 | 60,150 |
| ஆளணிக்கான கடன் / முற்பணம் | 18 | 52,432,002 | 50,317,302 |
| வெளி நிறுவனங்களில் வைப்புக்கள் | 19 | 353,594 | 221,707 |
| | | **177,216,814** | **130,343,132** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| முதலீடுகள் | 20 | 5,304,162 | 6,347,545 |
| சொத்துக்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | 3,837,385,543 | 3,976,796,587 |
| புலப்படாச் சொத்துக்கள் | 11 | 3,752,666 | 67,491 |
| மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் | 17,21 | 914,826,559 | 701,331,888 |
| | | **4,761,268,930** | **4,684,543,511** |
| **மொத்த சொத்துக்கள்** | | **4,938,485,745** | **4,814,886,643** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறு செலவுகள் | 22 | 14,856,451 | 36,706,111 |
| ஏனைய செலுத்த வேண்டிய செலவுகள் | 23 | 46,088,225 | 35,042,907 |
| வைப்புக்கள் மற்றும் நிறுத்திவைப்புக்கள் | 25 | 68,228,632 | 84,638,159 |
| குறுகிய கால ஒதுக்கீடுகள் | 26 | 2,502,590 | 1,314,590 |
| | | **131,675,899** | **157,701,768** |
| தாமதமான வருமானம் (திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம்) | 31 | **5,138,641** | **3,214,708** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 24 | 178,825,754 | 251,895,710 |
| விசேட நிதியம் (வரையறுக்கப்பட்ட) | 27 | 28,548,858 | 24,256,419 |
| | | **207,374,612** | **276,152,128** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **344,189,152** | **437,068,604** |
| **தேறிய சொத்துக்கள்** | | **4,594,296,593** | **4,377,818,040** |
| **தேறிய சொத்துக்கள் / பங்குகள்** | | | |
| செலவிடப்பட்ட மூலதன உதவிகள் | | 2,309,443,686 | 2,173,635,578 |
| செலவிடப்படாத மூலதன உதவிகள் | 28 | (161,133,939) | (157,930,840) |
| நிதி அல்லாத அரச மூலதன உதவி | | 290,741,388 | 314,046,649 |
| மீள் மதிப்பீட்டு மேலதிகம் | 29 | 2,149,157,473 | 2,149,157,473 |
| அன்பளிப்புக்கள் | 30 | 81,196,898 | 81,074,898 |
| திரட்டிய மேலதிகம்/(குறைபாடு) | | (125,925,771) | (230,535,418) |
| திரட்டிய பட்டப்பின் படிப்பு நிதியம் | | 2,356,759 | 1,927,313 |
| திரட்டிய திறந்த மற்றும் தொலைக் கல்விப் மையத்தின் நிதியம் | | 48,460,099 | 46,442,388 |
| **மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்** | | **4,594,296,593** | **4,377,818,040** |

இந்த நிதிக் கூற்று இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 106(i), 107(ii)(b) ஆம் இலக்க பந்திகளுக்கமைய மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் இலக்க பந்திக்கமைய

**ஏியு.எம்.டப்ளியு.வன்னிநாயக்க (நிதிப் பொறுப்பாளர்)** **பீ.எம்.தயாவங்ச (பதிவாளர்)**

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பு நிர்வாக சபையைச் சார்ந்ததாகும். இந்த நிதிக் கூற்று 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின்போது நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் ரோஹன பீ.மஹலியனாரச்சி **(துணைவேந்தர்)**

ரஞ்சித் லியனகே **(நிர்வாக சபை அங்கத்தவர்)** ரீ.தர்மராஜா **(நிர்வாக சபை அங்கத்தவர்)**

**பக்க இலக்கம் 05 முதல் 17 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 18 முதல் 28 வரையிலான கணக்குக் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.**

கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்

2021.12.31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான பங்குகள் மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றமடைதல் பற்றிய கூற்று

ரூ.

| | திரட்டிய மேலதிகம்/(குறைபாடு) | பட்டப்பின் படிப்பு நிதியம் | திறந்த மற்றும் தொலைக் கல்வி நிதியம் | செலவிடப்பட்ட மூலதன உதவி | செலவிடப்படாத மூலதன உதவி | நிதி அல்லாத அரசாங்க உதவி | அன்பளிப்புக்கள் | மீள் மதிப்பீட்டு மேலதிகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2020.01.01 ஆம் திகதியன்று மீதி** | **(160,113,083)** | **2,729,832** | **41,643,122** | **2,055,584,137** | **(107,996,145)** | **327,471,194** | **80,694,897** | **2,149,157,473** | **4,389,171,428** |
| ஆண்டினுள் செலவான மூலதன உதவி | - | - | - | 306,934,700 | (306,934,700) | - | - | - | - |
| ஆண்டினுள் செலவான மூலதன உதவி(மீண்டெழும் தன்மை கொண்ட) | - | - | - | (10,851,803) | - | - | - | - | **(10,851,803)** |
| ஆண்டினுள் பெற்ற அன்பளிப்புக்கள் | - | - | - | - | - | 9,500,000 | 380,000 | - | **9,880,000** |
| ஆண்டினுள் பெறப்பட்ட நிதிகள் | - | (910,474) | (790,061) | - | 257,000,000 | - | - | - | **255,299,465** |
| பெறுமானத் தேய்வு | - | - | - | (177,308,947) | - | (22,924,545) | - | - | **(200,233,492)** |
| கால எல்லையுடன் தொடர்பான மேலதிகம்/(குறைவு) | (70,422,335) | 107,955 | 5,589,326 | - | - | - | - | - | **(64,725,054)** |
| **2020.12.31 ஆம் திகதியன்று மீதி** | **(230,535,418)** | **1,927,313** | **46,442,388** | **2,173,635,578** | **(157,930,845)** | **314,046,649** | **81,074,897** | **2,149,157,473** | **4,378,540,543** |
| **2021.01.01 ஆம் திகதியன்று மீதி** | **(230,535,418)** | **1,927,313** | **46,442,388** | **2,173,635,578** | **(157,930,845)** | **314,046,649** | **81,074,897** | **2,149,157,473** | **4,377,818,034** |
| கடந்த ஆண்டுகளுடன் தொடர்பான சீர்படுத்துகைகள் | 1,559,985 | - | - | - | - | - | - | - | **1,559,985** |
| ஆண்டினுள் செலவான மூலதன உதவி | - | - | - | 304,884,538 | (304,884,538) | - | - | - | - |
| ஆண்டினுள் செலவான மூலதன உதவி(மீண்டெழும் தன்மை கொண்ட) | - | - | - | (5,070,584) | - | - | - | - | **(5,070,584)** |
| ஆண்டினுள் பெற்ற அன்பளிப்புக்கள் | - | - | - | - | - | - | 122,000 | - | **122,000** |
| ஆண்டினுள் பெறப்பட்ட நிதிகள் | - | (20,200) | (488,338) | - | 301,681,442 | - | - | - | **301,172,905** |
| பெறுமானத் தேய்வு | - | - | - | (164,005,848) | - | (23,305,261) | - | - | **(187,311,108)** |
| கால எல்லையுடன் தொடர்பான மேலதிகம்/(குறைவு) | 103,049,662 | 449,646 | 2,506,049 | - | - | - | - | - | **106,005,357** |
| **2021.12.31 ஆம் திகதியன்று மீதி** | **(125,925,771)** | **2,356,759** | **48,460,099** | **2,309,443,685** | **(161,133,941)** | **290,741,388** | **81,196,897** | **2,149,157,473** | **4,594,296,589** |

05 முதல் 17 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 18 முதல் 28 வரையான பக்கங்களின் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் கட்டாயப் பகுதியாகும்.

**The Accounting Policies on pages 08 to 13 and the Notes on pages 14 to 24 form an integral part of these Financial Statements.**

## கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
## 2021 திசெம்பர் ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்புக்கள் | ரூ. 2021 | ரூ. 2020 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான(பயன்பாட்டு) காசுப் பாய்ச்சல்** | | | |
| **ஆண்டிற்கான மொத்த மேலதிகம் / (குறைவு)** | | 106,005,357 | (64,725,054) |
| **நிதி அல்லாத உருப்படிளுக்கான சீர்படுத்தல்கள்** | | | |
| முன்னைய ஆண்டுகளின் சீர்படுத்தல்கள் | | 1,559,985 | - |
| தேய்மானம் | | 187,269,094 | 200,109,302 |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனை காரணமாக ஏற்பட்ட நட்டம் | | - | 211,886 |
| புலப்படாச் சொத்துக்களுக்கான பெறுமதி தேய்மானம் | | 42,014 | 124,190 |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான ஏற்பாடு | | (62,698,941) | 108,211,505 |
| **தொழிற்பாட்டு மூலதன சீர்படுத்தலுக்கு முன்னர் செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல்** | | **232,177,510** | **243,931,829** |
| **தொழிற்பாட்டு மூலதன சீர்படுத்தல்கள்** | | | |
| இருப்புக்கள் குறைவு | | (3,001,153) | (160,074) |
| கிடைக்க வேண்டிய நிலுவையின் அதிகரிப்பு | | (1,339,592) | (740,300) |
| குறுகிய கால முதலீடுகள் அதிகரிப்பு | | (2,940,634) | (3,451,213) |
| முன் செலுத்துகைகள் குறைவு / (அதிகரிப்பு) | | 366,118 | (833,155) |
| முற்பணம் குறைவு / (அதிகரிப்பு) | | 49,830 | 561,762 |
| ஊழியர் கடன்கள் குறைவு | | (2,114,700) | 5,006,790 |
| வெளித் தரப்பினரின் வைப்பு குறைவு | | (131,887) | 200,000 |
| செலுத்த வேண்டிய ஏனைய செலவுகள் குறைவு / (அதிகரிப்பு) | | 11,045,318 | (18,679,058) |
| வைப்புக்கள் மற்றும் பிடிமானத் தொகை குறைவு / (அதிகரிப்பு) | | (16,409,527) | (3,801,259) |
| குறுகிய கால ஒதுக்கீடுகள் அதிகரிப்பு / (குறைவு) | | 1,188,000 | (362,650) |
| அட்டுறு செலவுகள் அதிகரிப்பு / (குறைவு) | | (21,849,660) | (22,326,185) |
| ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் அதிகரிப்பு / (குறைவு) | | 1,923,933 | (59,080) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பிறப்பிக்கப்பட்ட காசு** | | **198,963,557** | **199,287,407** |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் | | (10,371,015) | (21,395,367) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளினூடான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **188,592,542** | **177,892,040** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மீதான காசுப் பாய்ச்சல்** | | | |
| சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | | (47,858,051) | (55,568,461) |
| புலப்படாச் சொத்துக்களை கையகப்படுத்தல் | | (3,727,189) | - |
| மூலதன மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை கையகப்படுத்தல்/பரிமாற்றல் | | (213,494,671) | (185,997,336) |
| முதலீடுகள் | | 1,043,383 | (643,124) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(264,036,527)** | **(242,208,921)** |
